விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 30 வியாழக்கிழமை (15.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 270

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாவதாக் தொழில் சாலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது

RAMCO CEMENT

சீமெந்து

# தேர்தல் அறிக்கைகள் வெளியான பின்னரே கூட்டமைப்பின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

## தமிழ்ச்செல்வனிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான அறிக்கைகள் வெளியான பின்பே கூட்டமைப்பு தனது முடிவினை வெளியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடனான சந்திப் பின்போது கூட்டமைப்பு எம்.பிக்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)





## கொழும்பு நீதிமன்றில் நேற்று குண்டுப்புரளி

(கொழும்பு)

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று காலை குண்டுப் புரளி ஏற்பட்டது.இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

கொழும்பு நீதிமன்ற வளாகத்திலுள்ள முதலாம் இலக்க நீதிவான் நீதிமன்ற அலுவலகத்திற்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

எதிர்முனையில் பேசியவர் நீதிமன்றத்திற்குள் நேற்றுப்பகல் 12.30 மணிக்கு வெடிக்கும் வகையில் குண்டொன்று வைக்கப்பட்டிருப்பதாகவும் அது குறித்து நீதிவானுக்கு தெரியப்படுத்துமாறு தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராசிக்குழுப் பொறுப்பாளர் காந்தி கைக்குண்டுத்தாக்குதலில் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ராசிக்குழு பொறுப்பாளர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் அவர் உயிரிழந்தார். நேற்றுக்காலை 6.15 மணியளவில் அவரது முகாமிற்குள் காலைக் கடன் கழிக்கச்சென்ற வேளை இவரின் மீது துப்பாக்கிக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது ராசிக்குழுப் பொறுப்பாளரான காந்தி என்பவரே கொல்லப்பட்டவராவார். உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள இம்முகாம் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதால் பாதுகாப்பு படையினரிடையே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் இடத்தை நோக்கி படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர்.

அத்துடன் நேற்று நண்பகல் வரையும் வீதிகள் மூடப்பட்டு தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது. ராசிக்குழுவின் ஸ்தாபகரான ராசிக் என்பவர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து காந்தி அதன் பொறுப்பாளராக கடமையை ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-ற-4)

## வரவு செலவுத்திட்டம் நவம்பர் 10-ல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் 10ந் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ் வரவு செலவுத்திட்டத்தினூடாக மக்களுக்கு கூடுதலான நிவாரணப்பொருட்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தை வெளியிடுவதற்கான அனைத்துப் பணிகளும் நிறைவு பெறும் நிலையில் உள்ளதாகவும் உரிய காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நிதியமைச்சர் தெரிவித்தார். (ச-4)

## மருதனார்மடத்தில் நேற்று இளம் பூசகர் சுட்டுக்கொலை

### காரில் சென்றுகொண்டிருந்தபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மருதனர்மடம் ஆஞ்சநேயர் ஆலயப் பூசகர் நேற்று மருதனார்மடத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் அவர் வீடுநோக்கிக் காரில் சென்று கொண்டிருந்த சமயம் காரின் பின் பகுதியால் வந்த இனந்தெரியாதோர் சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

தலையில் படுகாயமடைந்த பூசகர் ஸ்தலத்திலேயே பலியானார். அவரது தலைப் பகுதியில் நான்கு சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுந்தரேசக்குருக்கள் சபாநாத சர்மா (வயது 25) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.



படம்: தவராஜா

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாக மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரணவிசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நாளை நடைபெறவுள்ளது. (ச-ற-4)

## வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி

## பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி முல்லைத்தீவில் எழுச்சிப் பிரகடனம்

(முல்லைத்தீவு)

மரபுவழித்தாயகம்,தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் இறைமைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டுமென்று வவுனியாப் பிரகடனத்தை வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் புதுக்குடியிருப்பில் நேற்று ஒன்று கூடினார்கள்.

புதுக்குடியிருப்பு 2ஆம் லெப். மாலதி விளையாட்டரங்கில் நேற்று மாலை 4மணியளவில் தொடங்கிய இந்நிகழ்வில் வீரச்சாவைத்தழுவிய முல்லை மாவட்டத்தளபதி பசீலனின் தாயார் நல்லையா தங்கம்மாள், துணைப்படை மாவீரர் மயில்குஞ்சின் துணைவியார் வசந்தாதேவி,எல்லைப்படை மாவீரர் மதியாபரணத்தின் துணைவியார் வானதி ஆகியோர் பொதுச்சுடரேற்றினர்.

தமிழீழ தேசியக்கொடியை வன்னிப் பிராந்திய அரசியல் துறைப்பொறுப்பாளர் மாறனின் தந்தையார் செல்லத்துரை சின்னத்துரை ஏற்றினார்.

எழுச்சிச்சுடரினை முல்லை வலய கல்விப்பணிப்பாளர் அரியரட்ணம் ஏற்றிவைத்த சமநேரத்தில் 16 எழுச்சிச்சுடர்களினை பிரதேசசெயலர்கள் ஏற்றினர். வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் கிருஸ்ணபிள்ளை தலைமையில் இடம்பெற்ற அரங்க நிகழ்வில் ஆசியுரைகளை பிரம்மசிறி ராமசாமிக்குருக்கள், முல்லைத்தீவு பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் ,முல்லை மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள் தலைவர் முத்து முகமது சேதுமுகமது ஆகியோர் வழங்கினர்.

கருத்துரைகளின் நிறைவில் வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முல்லைத் தீவு மாவட்ட மக்களின் எழுச்சிக்குரல் எழுப்பப்பட்டது. (ச-4)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

your friend in the skies...

021 - 222 3891, 222 6297, 0777-2349999, 011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வ சக்தி மகா யாகம்

## 16-18.09.2005

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 80ஆவது அவதார ஆண்டில் நாட்டில் நிரந்தர சாந்தி சமாதானம் ஏற்பட வேண்டுமென வேண்டி, வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் இணைப்புக் குழுவினரால் நடாத்தப்படவுள்ள யாக நிகழ்வு.

நிகழும் மங்கலகரமான பார்த்திப வருஷம் புரட்டாதி மாதம் 1ஆம் நாள் (17.09.2005) சனிக்கிழமை பூரணை தினத்தில் சர்வ சக்தி மகா யாகம் நடைபெற பகவானின் திருவருள் கைகூடியுள்ளது.

**கிரியைகள் யாவும் வடகோவை சிவஸ்ரீ. வை.மு.பரமசாமிக் குருக்கள் அவர்களின் தலைமையில் நடைபெறும்**

**இடம் :- ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை விளையாட்டு மைதானம்**
**(சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்)**

***கிரியா காலங்கள்***

**16.09.2005 யாக ஆரம்பம்:** வெள்ளிக்கிழமை மாலை (இலங்கை நேரம்) 4.15 மணிமுதல் ஓங்காரம், காயத்திரி ஜெபம், பஜனை, சங்கல்பம், விநாயகர் வழிபாடு, வாஸ்து சாந்தி, கடஸ்தாபனம், யாக ஆரம்பம் என்பன இடம்பெறும்.

**17.09.2005 நவக்கிரக யாக பூஜை:** சனிக்கிழமை காலை (இலங்கை நேரம்) 6.30 மணிமுதல் பிற்பகல் 10.00 மணிவரை பஜனை, குருவந்தனம், நவக்கிரக யாக பூஜை, ஹோமம், பாராயணம், புஷ்ப சமர்ப்பணம், பூஜை, பிரசாதம் வழங்கலைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

**ஆசியுரை:- நல்லை ஆதீன முதல்வர் இரண்டாவது குருமஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**

**18.09.2005 மிருத்துஞ்ஜய யாக பூஜை:** ஞாயிற்றுக்கிழமை காலை (இலங்கை நேரம்) 6.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை மிருந்துஞ்ஜய யாகபூஜை, திரிசதிஹோமம், உருத்திர பாராயணம், காயத்திரி ஹோமம், வஸோத்தாரா, பூர்ணாகுதி, பூஜா சமர்ப்பணம், புஷ்ப சமர்ப்பணம், பஜனை, பூஜை, மஹா மங்கல ஆராத்தியைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

**ஆசியுரைகள்: ஸ்ரீ.செ.சிவஞானம் அவர்கள்** (பிராந்திய ஆலோசகர் ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவனம்)
**செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்** (உப அதிபர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**அடியார்கள் அனைவரும் இவ் யாக நிகழ்வில் பங்குபற்றி பகவானின் அருள் பெற்றுய்யவும்.**

குறிப்பு: கலந்துகொள்ளும் அடியார்கள் யாகத்திற்குத் தேவையான பூக்கள் கொடுத்துதவவும்.

'ஜெய் சாயிராம்'

**இங்ஙனம்,**
**வடபிராந்திய இணைப்புக் குழு,**
**சத்திய சாயி சேவா நிறுவனம்.**


# க.பொ.த (உ/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு,

**யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

தி.திருமாலினி - 2ஏ,பி

**கணிதப் பிரிவு**

சி.கோபிகா - ஏ,2பி

**உயிரியல்பிரிவு**

சி.நித்தியரூபன் - ஏ,2பி

**கலைப்பிரிவு**

சி.கிரிஜா - ஏ,2பி, செ.சிவானதி - ஏ,பி,சி, சி.குகன் - ஏ,2பி, த.மைதிலி - 2ஏ, சி, ந.ஜனனி - ஏ, 2சி, த.சங்கீதா - ஏ,பி,சி, ஜெ.தினேஸ் - ஏ,2சி, க.சர்மிலா - ஏ,2சி, க.சவுந்தினி - ஏ,பி,சி, கு.மதனகுமார் - ஏ,2சி, சி.[illegible] - ஏ,2சி, த.சோபிகா-ஏ,2சி. (து-37)

# பொங்குதமிழுக்கு தயாராகுமாறு பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பேரெழுச்சியுடன் நடாத்தப்படவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் அனைவரையும் ஒன்றிணையுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளதாவது,

எம் இனிய உறவுகளே,

எமது உரிமைகளை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டி மீண்டும் ஒரு பொங்கு தமிழாய் உருவெடுத்துள்ளது எமது மாணவர் சமூகம். இன்றிலிருந்து உங்களைச் சந்திக்க பிரதேசங்கள் தோறும, உங்கள் வீடுகள் தோறும, அணி அணியாக எமது மாணவர்கள் வருகை தரவுள்ளார்கள்.

இன்முகத்தோடு அவர்களை வரவேற்று, அவர்கள் கூறும் கருத்துக்களை அன்புடன் செவிமடுத்து எழுச்சிப் பிரகடனத்திற்கு பலம் சேர்க்கும் வகையில் நீங்களும் எம்முடன் இணைந்து எதிர்வரும் 30ஆம் திகதியனறு ஒருமித்த குரலாகி எமது கோரிக்கையை பல்கலை மைதானத்தில் சர்வதேசத்தை நோக்கி அனைவரும் வான்முழங்க குரல் கொடுப்போம். அனைவரும தயாராகுங்கள்.

தமிழுக்கு உயிர்கொடுத்த தலைவனே எம் தலைவன்!

தமிழீழமே எங்கள் மூச்சு! என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# இராணுவத்தினருக்கு விசேட பயிற்சி

அடிககடி வேலை நிறுத்தத்தில் ஈடுபடும அரசுத்துறையின் சேவைகள் பற்றிய விசேட பயிற்சிகளை இராணுவத்தைச் சேர்ந்த 100 வீரர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த 100 பேருக்கும் இந்தியாவில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

ரயில் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் முக்கிய அரச நிறுவனங்களின் கடமைகள் தொடர்பல் இவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அரச சேவையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது குறித்த சேவைகளை எதுவித தடையும் இன்றி இவர்களைக் கொண்டு தொடர்வதே அரசாங்கததின் நோக்கமாகும். (ந-4)

# மிதிவெடி அகற்றப்பட்ட 2 பிரதேசங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்ட இரு பிரதேசங்கள் இன்று மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளன.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு பின் பக்கமாகவுள்ள இரு பிரதேசங்கள் இன்று காலை 10.00 மணியளவில் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தால் கிராம சேவையாளர் ஊடாக பொதுமக்களிடம் கையளிக்கப்படவுளளன.

மேற்படிப் பகுதியில் 9,239 சதுர மீற்றர் நிலப்பரப்பில் இருந்து 33 மிதி வெடிகள் மற்றும் ஒரு 60 mm மோட்டாரும, மற்றைய 9,240 சதுர மீற்றர் நிலப்பரப்பில் இருந்து 12 மிதிவெடிகளும் டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தால் மீட்கப்படடுள்ளமை குறிப்பிடததக்கது. (ந)

# கண்டெடுப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் பாக் ஒன்று கண்டெடுக்கப்பட்டு புங்குடுதீவு கடற்படை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனை தவறவிட்டோர் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு புங்குடுதீவு கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார். (ந-126)

# மின்விளக்கு ஒளிரவில்லை

(யாழ்ப்பாணம்)

மாவடியில் இருந்து சித்தன்கேணி வரையான பிரதான வ்தியில் காணப்படும் மின்விளக்குகள் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக ஒளிரவில்லை. இதனால் அவ் வ்தியால் இரவு வேளையில் செல்பவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இது தொடர்பாக சித்தன்கேணியிலுள்ள மின்சாரசபையினால் பல தடவைகள் முறைப்பாடுகள் செயயப்பட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கபபடவில்லை என அப்பகுதி மக்கள குற்றம் சாட்டுகின்றனர். (த-19)

# பொலிஸ் தலைமையகத்தில் பாரிய தீ அனர்த்தம்

(கொழும்பு)

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தினால பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவிததுள்ளார்.

பொலிஸ் தலைமைக் கட்டடத்தில் நேற்றுக் காலை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் 3ஆவது மாடியிலிருந்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் இந்தத் தீ பரவியதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்துளளர்.

இந்த மாடியிலேயே சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் அலுவலகங்களும், ஒன்றுகூடல் மண்டபமும் காணபபடுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறியுளளர்.

தீயணைப்புப் படையினரின் ஒத்துழைப்புடன் இந்தத் தீ ப,ரண கட்டுப்பாட்டிறகுள் கொண்டுவரப்படடது.

இந்தத் தீ விபத்து மின் ஒழுக்கின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுவதாக சிரேஷ்ட பிரதிப பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

இந்தத் தீ விபத்தினால் காயமடைந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவக்கப்பட்டுள்ளது. (ந-2)

# ஜனாதிபதி தேர்தல் திகதி நாளை அறிவிப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் திகதி நாளை அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் தற்சமயம் தயாரிக்கப்பட்டு வருவதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையில் ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி முதல் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் திகதி நிர்ணயிக்கப்படலாம்.

அதேநேரம் நவம்பர் 17ஆம் திகதி அல்லது அதற்கு அண்மையிலான திகதி ஒன்றில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படலாம் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-4)

# இலங்கை மக்கள் ஒருபோதும் யுத்தத்தை அனுமதிக்கப் போவதில்லை

(கொழும்பு)

இலங்கை மக்கள் ஒருபோதும் யுத்தத்தை அனுமதிக்கப்போவதில்லையென்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நிரந்தர சமாதானத்தை அடைவற்கு அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.அப்போதுதான் நாம் சமாதானம் என்ற இலக்கினை அடைய முடியும்.

கொழும்பு வந்துள்ள சீன நாட்டு கொம்யூனிஸ் கட்சிப் பிரதிநிதிகளை நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் இரு நாட்டு உறவுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

கொழும்பு வந்துள்ள சீனப் பிரதிநிதிகள் 6பேரும் மற்றும் இலங்கைக்கான தூதுவரும் இதில் கலந்துகொண்டார். (ந-8)

# போலி சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகம்; ஒருவர் கைது

(கொழும்பு)

போலி சாரதி அனுமதிப் பத்திரங்களை விநியோகம் செய்த ஒருவரை மாதம்பை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாதம்பை கல்முருவப் பிரதேசத்தில முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரிடம் போலி அனுமதிப் பத்திரம் இருப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டுனர் பயிற்சி, மருத்துவப் பரிசோதனைகள் இல்லாமல் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாகக் கூறி இவர் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து மேலும் பல போலி சாரதி அனுமதிப் பத்திரங்கள கைபபற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இந்நபர் இலகு வாகனங்களுக்கு ரூ.4 ஆயிரமும் கனரக வாகனங்களுக்கு ரூ.8 ஆயிரமும் அறவிட்டுள்ளதாகவும் குறிபபிட்டனர். (ந-2)

# போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (த)

# உப அதிபர் நியமனம்

(துன்னாலை)

நெல்லியடி மத்திய மகாவிததியாலத்திற்கு திருமதி ம.மகேந்திரா புதிய உப அதிபராக வடமராட்சி வலய கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் உப அதிபராக இருந்த பிறேமாவதி சண்முகம் ஓய்வு பெறறதையடுத்து உப அதிபர் பதவிக்கு இருவர் போட்டியிட்டனர். இதனால் பாடசாலை நிர்வாகத்திற்குள் குழப்பம் ஏற்பட்ட நிலையில் போட்டியிட்ட இவரையும் தவிர்த்து சேவை மூப்பின் அடிப்படையில் தற்போது அங்கு பணிபுரியும் திருமதி ம.மகேந்திரா வலயக் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (த-101)


# உள்ளூராட்சி விழா

சாவகச்சேரி நகரசபை உளளூராட்சிவார விழாநாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நகரசபை வளாகத்தில் சாவகச்சேரி நகரசபை செயலாளர் கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் கெ.கணேஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையார் க.சபாபதிப்பிள்ளையும், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக, வவுனியா நகரசபை செயலாளர்.மு.செ.சரவணபவன், தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனும் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தலைவர் வீ.மகாலிங்கம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய கலாநிதி ச.அம்பிகைபாகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-ச)

# இயற்கையின் எதிர்த்தாக்குதல்

அமெரிக்கா அதன் வரலாற்றில் கண்டிராத பேரிழப்பைச் சந்தித்துள்ளது. அந்நாட் டின் கடலோர மாநிலங்களை ஆகஸ்ட் 29 அன்று தாக்கிய "கத்ரீனா"




எனும் ஹரிக்கேன் சூறாவளி ஆயிரக்கணக்கானோரைக் கொன்றது இலட்சக்கணக்கானோரை அகதிகளாக் கியுள்ளது.

இந்தியப் பெருங்கடல் நாடுகளை சுனாமி தாக்கிய போது மனிதாபிமானத்தைத்தான் இப்போ நாம் கண்டோம். ஆனால், அமெரிக்காவில் பேரிழிப்பைச் சந்தித்துள்ள மாநிலங் களில் கொள்ளை, கொலை, துப்பாக்கிச் சூடு கற்பழிப்பு இவைதான் நடக்கின்றன.

சூறாவளி தாக்கிய லூசியானா, மிசிசிபி மாநிலங்களுக்கு 30,000 இராணுவத்தினரை அமெரிக்க அரசு அனுப்பி வைத்துள்ளது. இந்த



இராணுவ வீரர்கள் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கான பணியில் அமர்த்தப்படவில்லை. மாறாக அம் மாநிலங்களில் உள்ள கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் கொள்ளையடிக்கப்படாமல்



தடுப்பதற்காகக் காவல் காக்கின்றனர். நிவாரணப் பணிகளுக்காக தனியே 17,000 படை வீரர்கள் தாமதமாக அனுப்பப்பட்டுள்ளனர்.

அமெரிக்க வரலாற்றின் இருண்ட பக்கங்களாகப் பதிந்து போன கறுப்பர்-வெள்ளையர் இன வேற்றுமை சிக்கல் இந்தச் சூறாவளியால் மீண்டும் எழுந்துள்ளது. வெள்ளையரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு அமெரிக்கா. சூறாவளியால் பாதிக்கப்பட்ட லூசியானா, மிசிசிபி மாநிலங்களில் பாதிக்கும் சற்றுக் கூடுதலான அளவு கறுப்பின மக்கள் வாழ்கின்றனர். ஆனால் சூறாவளியால் பாதிக்கப்பட்டோரில் சுமார் 99 சதவீதத்தினர் கறுப்பர்களாகவே இருப்பது உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இத்தகைய சிக்கல் கள் ஒருபுறம் இருக்க இச் சூறாவளிப் பேரிழப்புக்கு அமெரிக்காவேதான் காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## காலநிலையில் மாறுதல்

வெப்ப மண்டல சூறாவளி (**Tropical Cyclone**) மூன்று வகைப்படும். ஒன்று கடிகாரச் சுற்றிற்கு எதிராகச் சற்றும் 'ஹரிக்கேன்' வகை சூறாவளி (**Hurri-canes**) அடுத்தது, கடிகாரச் சுற்றில் சுழன்று வீசும். 'டையூன்' வகை சூறாவளி (**Typhoons**) மூன்றாவது வகை சூறாவளி இந்தியப் பெருங்கடல் பகுதியில் தோன்றும் சைக்ளோன் (**Cyclones**) ஆகும். அமெரிக்காவை ஹரிக்கேன் தாக்கும் நிகழ்ச்சி புவியில் மனித இனம் தோன்றுவதற்கு முன்பிலிருந்தே நடந்து வருவதுதான்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாகத் தான் இந்தச் சூறாவளிகளின் எண்ணிக்கையும் அவற்றின் வீசும் வேகமும் அதிகரித்திருப்பதாக அறிவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். மனிதர்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு போன்ற புதுப்பிக்க இயலாத எரிபொருட்களால் காற்று மண்டலத்தில் கலக்கும் கரிய மில வாயுவின் அளவு அதிகமாகிக் கொண்டே செல்கிறது. கரியமில வாயு அடர்த்தி அதிகமாதலின் விளைவால் புவியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிக்கிறது. இதனால் ஏற்படக் கூடிய பேராபத்துக்களைத் தடுக்க வேண்டுமானால், உடனடியாக வளி மண்டலத்தில் கலக்கும் கரியமில வாயுவின் அளவைக் குறைத்தாக வேண்டும் என விஞ்ஞானிகள் எச்சரித்தனர்.

அதாவது, பெட்ரோல், டீசல், எரிவாயு, நிலக்கரி போன்ற புதை படிவ எரிபொருள் களின் பயன் பாட்டை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். அதுவும் 1990ஆம் ஆண்டில் வளிமண்டலத்தில் எவ்வளவு கரியமில வாயு கலந்ததோ, அதற்கும் கீழாக 5.2 சதவீதம் குறையும் அளவிற்கு எரிபெருள் பயன்படுத்துவதைக் குறைத்தால்தான் உலகைக் காக்க முடியும் - என ஐக்கிய நாடுகள் சபை தீர்வை முன்வைத்தது. இந்த நோக்கில் 'க்யோட்டோ' உடன்படிக்கை 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மக்கள் தொகையில் 4 சவீதத்தினை மட்டுமே கொண்டுள்ள அமெரிக்காதான் உலகிலேயே அதிக அளவாக 25



சதவீத கரியமில வாயுவிற்குக் காரணமாக உள்ளது.உலகின் மொத்த பெட்ரோலியப் பொருட்களின் பயன்பாட்டில் 25 சதவீதத்தினை அமெரிக்கர்கள்தான் பயன்படுத்துகின்றனர். எனவே, உலகளவில் கரியமில வாயு வெளி யாகும் அளவை, 1990ஆம் ஆண்டின் அளவுக்குக் கீழ்5.2 சதவீதம் வரை குறைக்கக் கோரும் 'க்யோட்டோ' உடன்படிக்கை, அமெரிக்க நாடு 1990இல் வெளியிட்டதற்கும் கீழ் 7 சதவீதம் குறைத்தாக வேண்டும் எனக் குறிப்பிட்டது.

'க்யோட்டோ' உடன்படிக்கையை ஏற்றால் அமெரிக்காவின் தொழில்துறை பாதிக்கப்படும். குறிப்பாக அமெரிக்காவின் மிகப்பெரிய பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள் பாதிக்கப்படும். எனவே ஐ.நா.வின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என



அமெரிக்கா நிராகரித்தது. "அமெரிக்காவின் பொருளாதாரத்தை எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது" என அதிபர் புஷ் அறிவித்தார். கடந்த அமெரிக்க தேர்தலின்போது அதிபர் புஷ்ஷின்



தேர்தல் செலவுகளுக்காக பெட்ரோலிய நிறுவனங்கள் 52 மில்லியன் டொலர் சுமார் 220கோடி ரூபாய் நிதி அளித்தன.

## காரணகர்த்தா

அமெரிக்காவை கத்ரீனா சூறாவளித் தாக்கியதற்கு இயற்கையை குற்றம் சாட்டமுடியாது. மாறாக



அமெரிக்கர்களின் மாசுபடுத்தும் போக்கினைத்தான் குற்றம் சொல்லவேண்டும் என ஜெர்மன் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

கத்ரீனா சூறாவளித் தாக்குதலால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட நியூ ஆர்லியான்ஸ் நகரசபை, கயோட்டோ ஒப்பந்தத்தை அமெரிக்க அரசு ஏற்கக் கோரும் முக்கியமான தீர்மானத்தை 2001மே மாதம் கொண்டுவந்தது. பெரும் ஹரிக்கேன் சூறாவளித் தாக்குதல் களிலிருந்து நியூ ஆர்லியான்ஸ் நகரைக் காப்பாற்ற அமெரிக்க அரசு செயல்படுத்தத் தொடங்கிய திட்டத்தை 2003ஆம் ஆண்டில் நிறுத்திவிட்டது. இதற்கு ஈராக் போருக்குக் கூடுதல் நிதி தேவைப்பட்டது தான் காரணம் என அமெரிக்க அரசே கூறியுள்ளது.

இங்கிலாந்து அரசின் தலைமை விஞ்ஞானி சர் டேவிட் கிங், 'கத்ரீனா' குறித்து 'உலகின் மிகப்பெரிய அச்சுறுத்தல் பயங்கரவாதம் அல்ல. மாறாக புவியின் வெப்பநிலை அதிகரிப்பதுதான் உண்மையான ஆபத்து. இந்த உண்மையை உணர்ந்து அமெரிக்கா தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்' என்றார்.

கடந்த 30ஆண்டுகளாக வீசியுள்ள ஹரிக்கேன் சூறாவளிகளை



ஆய்வுசெய்த மசாசு சட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர் கெர்ரி இம்மானுவேல், 1970ஆம் ஆண்டிற்குப் பிறகு ஹரிக்கேன் சூறாவளியின் வேகம் 50சதவீதம் அதிகரித்துள்ளதைத் த்னது ஆய்வு மூலம் உறுதி செய்துள்ளார்.

வெப்ப மண்டலப் பெருங் கடல்களின் மேற்பரப்பின் வெப்பநிலை அதிகரிப்பதால் ஹரிக்கேன் சூறாவளி உருவாகிறது. குறிப்பாக அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை 27 டிகிரி சென்டிகிரேடைத் தாண்டும் நிலையில் ஹரிக்கேன் உருவாவதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இந்த வெப்பநிலை அதிகரிக்க, அதிகரிக்க சூறாவளியின் வேகமும் அதிகரிக்கிறது.

சுமார் 30 அல்லது 40 ஆண்டு களுக்கு முன்பெல்லாம் அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்பரப்பின் ஆகஸ்ட் மாத வெப்பநிலை 30 முதல் 31 டிகிரி சென்டிகிரேட் வரை அதிகரித்தது.



ஆனால், இப்போது காற்றின் கரிய மிலவாயு அளவு அதிகரிப்பதற்கு ஏற்ப, புவியின் வெப்பநிலை உயர்ந்து விட்டதன் விளைவாக அட்லாண்டிக் கடல்பரப்பின் வெப்பநிலை 33 டிகிரி சென்டிகிரேடாக உயர்ந்துவிட்டது! இதன் விளைவாக கத்ரீனா பெரும் சூறாவளியாக மாறி அமெரிக்காவைத் தாக்கியுள்ளது. இந்தப் பெரும் சூறாவளி 'கத்ரீனா' வோடு முடிந்து போகாது.

இனி இதைவிடப் பெரிய சூறாவளிகள் தாக்கும் என விஞ்ஞானிகள் எச்சரிக் கின்றனர்.

புவியின் வெப்பநிலை உயர்வைத் தடுக்க வேண்டுமானால், புதை வடிவ எரிபொருளான பெட்ரோல், டீசல், எரிவாயு நிலக்கரி போன்றவற்றின் பயன்பாட்டை உடனடியாகக் குறைக்க வேண்டும். இதற்கான க்யோட்டோ உடன்படிக்கையை உலக நாடுகள் அனைத்தும் ஏற்க வேண்டும். அமெரிக்கர்கள் தங்களின் ஊதாரித்தனமான பேராசை வாழ்க்கை



முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அதற்கான விலையை அமெரிக்கா மட்டுமல்ல, இந்த உலகமே கொடுத்தாக வேண்டிய சூழல் வரும்!.

**இணையப்பார்வை**

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை


என். சொக்கன் 22

எது எப்படியோ, டாக்டர் பானுவும் மற்றவர்களும், வீரப்பனையும் ராஜ்குமாரையும் சந்தித்து விட்டார்கள். வீரப்பனின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கப் பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, டாக்டர் பானு, ராஜ்குமாரின் காதில் ரகசியமாக ஒரு விஷயத்தைக் கிசுகிசுத்தார். அதன்படி, ராஜ்குமார் தனக்கு உடல்நிலை சரியில்லாதது போல் நடிக்க வேண்டும். அப்போதுதான், வீரப்பன் அவரைச் சீக்கிரமாக விடுவிப்பான்.

இதற்கிடையே, கோபத்தில் இருந்த பழ. நெடுமாறனும் சமாதானம் அடைந்து வீரப்பனைச் சந்திக்க மீண்டும் கிளம்பினார்.

அதேநேரத்தில், அங்கே காட்டில், ராஜ்குமாருக்கு 'திடீரென்று' உடம்பு சரியில்லாமல் போனது. அவரைப் பரிசோதித்த டாக்டர் பானு, உடனடியாக ராஜ்குமாருக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.



அதன்பின், மேலும் சில நாள்களுக்கு இந்தக் கடத்தல் நாடகம் தொடர்ந்தது. ஒருவழியாக, செப்டம்பர் 14ஆம் திகதி (அதாவது கடத்தப்பட்டு 108 நாள்களுக்குப் பின்) ராஜ்குமாருககும் மற்றவர்களுக்கும் நினைவுப் பரிசெல்லாம் கொடுத்து, நெடுமாறன் மற்றும் இதர தூதுக் குழுவினருடன் அவரைப் பத்திரமாக அனுப்பி வைத்தான் வீரப்பன்.

இந்தச் செய்தி வெளியானதும், பெங்களூரிலும் மற்ற நகரங்களிலும, திருவிழாக் கோலம்தான். வீரப்பனின் பிடியில் இருந்து விடுதலையாகி வரும் ராஜ்குமாரை வரவேற்பதற்கு, பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கிட்டத்தட்ட மூன்றரை மாதங்களுக்கு மேலாகக் காட்டில வாழ்ந்திருந்த ராஜ்குமார், உடலளவில் கொஞ்சம் தளர்ந்திருந்தார் என்றாலும், இப்போது தனக்கு மறுபிறவியே கிடைத்து விட்டதுபோல், அவர் உற்சாகமாகத் தென்பட்டார் அவர். தன்னைக் காப்பாற்றிய தமிழக அரசுக்கும், தூதுக் குழுவினருக்கும், மனதார நன்றி சொன்னார் ராஜ்குமார்.

அவருடைய ரசிகர்களும், கர்நாடக மக்களும், இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணமான வீரப்பனைத் திட்டித் தீர்க்கக் கூடத் தோன்றாமல், ராஜ்குமாரின் வருகையைக் கொண்டாடினார்கள். பெரிதாக எந்த உயிரிழப்பும் இல்லாமல், எல்லாம் சுமுகமாக முடிந்துவிட்டது தான், அவர்களுடைய நிம்மதிக்குக் காரணம்.

ஆனால், உணர்ச்சி வசப்படாமல், இந்த விஷயத்தைக் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பார்க்கிற போது, ஒரு விஷயம் புலப்படுகிறது- மூன்று மாதங்களுக்கு முன், ராஜ்குமாரைக் கடத்திய போது, வீரப்பன் அனுப்பிய, பத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகளில், பெரும்பாலானவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அப்படியானால், அவன் ஏன் ராஜ்குமாரை விடுவிக்கவேண்டும்?

ராஜ்குமாரின் விடுதலைக்காகப் போராடிய கர்நாடக அரசாங்கமோ அல்லது அவர்களுக்குப் பெரிதும் உதவிய தமிழக அரசோ, இதுபற்றி வாயைத் திறக்கவில்லை. 'ராஜ்குமாரை விடுவிப்பதற்காக, வீரப்பனுக்கு ஒரு நயா பைசாகூட தரப்படவில்லை' என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள்.

ஆனால், இந்தக் கடத்தலின் பின்னே, ஏராளமான பணம் விளையாடியிருக்கிறது என்றுதான் பலரும் சொல்கிறார்கள். ராஜ்குமாரைப் பணயமாக வைத்துக்கொண்டு, தன்னால் முடிந்தவரை சம்பாதித்துவிடலாம் என்று எண்ணித்தான், இந்தப் பணங்காய்ச்சிக் கடத்தலில் வீரப்பன் ஈடுபட்டிருக்க வேண்டும்.

வீரப்பன் கடத்தப்பட்ட போது, கர்நாடகக் காவல்துறையின் தலைவராக இருந்த சி. தினகர், இதுபற்றி விளக்கமாக எழுதியிருக்கிறார். ராஜ்குமார் கடத்தப்பட்ட போது, அவரை விடுவிப்பதற்காக, வீரப்பனுக்கு ஏராளமான பணம் தரப்பட்டதாக, நீதிமன்றத்தில் ஆஜராகி (தினகர் எழுதிய புத்தகத்துக்கு எதிராக, 'நக்கீரன்' கோபால் தொடர்ந்தமான நஷ்ட வழக்கில்), சாட்சியும் சொல்லி இருக்கிறார்.

அப்படியானால், இதுவரையிலான 'ஆள்கடத்தல்'களையெல்லாம், 'சும்மா' விளையாட்டாகச் செய்துகொண்டிருந்த வீரப்பன், இந்தமுறை புளியங்கொம்பாகப் பிடித்துவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

## 4. புதையல்

வீரப்பன் தமிழக அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேள்விப்பட்டதுமே, அவன வழக்கமாக உலவிவந்த காடுகளைச் சுற்றியிருக்கும் கிராமத்து மக்கள், கையில் பெரிய கடப்பாரைகள், மண்வெட்டிகளோடு கிளம்பிவிட்டார்கள்.

அவர்கள் சென்றது, வீரப்பனுக்குச் சவக்குழி வெட்டுவதற்கு அல்ல. காட்டுக்குள் அவன் ஒளித்து வைத்திருப்பதாகச் சொல்லப்படும் கோடிக்கணக்கான ரூபாய்ப் புதையலைத் தோண்டி எடுப்பதற்கு.

பல ஆண்டுகளாக, யானைத் தந்தங்கள் மற்றும் சந்தனமரக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீரப்பன். இதன்மூலம் சம்பாதித்தது எவ்வளவு என்கிற கணக்கு யாருக்கும் தெரியாது. ஆனால், சமீபத்தில் அவன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்திய போது, அவரை விடுவிப்பதற்காக, அவனுக்கு ஏராளமான தொகை தரப்பட்டது என்று பலரும் சொல்கிறார்கள்.

இப்படிப் பலவிதங்களில் பணம் சேர்த்த வீரப்பன், அந்தக் காசையெல்லாம் வைத்துக்கொண்டு, காட்டுக்குள் என்னதான் செய்தான்?

வீரப்பனின் முன்னாள் நண்பர்கள் பலர், அவன் தனக்குக் கிடைக்கும் பணத்தையெல்லாம், தன்னுடன் இருக்கும் குழுவினருக்கும், தனது கும்பலின் நடவடிக்கைகளுக்கு உதவும் பொது மக்களுக்கும் பிரித்துக் கொடுத்துவிடுவான் என்று சொல்கிறார்கள்.

ஆனால், வீரப்பனின் இந்த 'வள்ளல்' பிம்பத்தை, பெரும்பாலானவர்கள், குறிப்பாக, வீரப்பனுடன் நேரடித் தொடர்பு இல்லாத பொதுமக்கள் நம்புவதில்லை. அவன் தன்னுடைய செல்வத்தையெல்லாம், காடடுக்குள் குழி தோண்டிப் புதைத்து வைத்திருக்கிறான் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள்.

இதில் ஒரு பெரிய வேடிக்கை என்னவென்றால், வீரப்பனின் இந்தப் புதையலைச் சுற்றிலும், கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், தன்னைத் தவிர, வேறு யாரேனும் அந்தப் பணத்தைத் தோண்டி எடுக்க முயன்றால், அவர்களைக் கொன்றுவிடுவதற்கான ஏற்பாடுகளை வீரப்பன் செய்திருக்கிறான் என்றும் பல அம்புலிமாமா கதைகள் உலவுகின்றன.

என்றாலும், மக்கள் கடப்பாரையோடு காட்டில் பள்ளம் தோண்டச் செல்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டு, போலீஸும் பதறிப் போகிறது.

வீரப்பன் காட்டில், நிஜமாகவே புதையல் உண்டா, இல்லையா என்று நம்பாமல் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனால், இத்தனை ஆண்டுகளில், ஒரு பெரிய புதையலைச் சேர்க்குமளவு வீரப்பன் சம்பாதித்திருக்கிறானா என்று யோசிக்கலாம்.

எழுபதுகளில் தொடங்கி, அடுத்த இருபது ஆண்டுகளுக்கு மேல், தான் சார்ந்திருந்த கானகத்தை மொட்டையடித்து யானைத் தந்தந்தங்களையும், சந்தன மரங்களையும் கடத்திவந்த வீரப்பன், இதன்மூலம் சுமார் 27 கோடி ரூபாய் வரை சம்பாதித்திருக்கலாம் என்று ஓர் உத்தேசமான கணக்கு சொல்கிறது.

(தொடரும்)


# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



## இன்று தீர்த்தோற்சவம்

### கருணை பொழிகுவாய் சிவகாமியே

எல்லோரும் இன்புற் றிருக்கஅருள் செய்குவாய்
எண்ணங்கள் ஈடேற்றுவாய்
ஏதங்கள் வாராது பாதுகாத் தருளுவாய்
இல்லாமை இலையாக்குவாய்
பொல்லாத போர்மீண்டும் வாராது காத்தருள்
புரிகுவாய் புவனேஸ்வரி
பூமியில் செந்தமிழர் குலம்வாழ நின்கருணை
பொழிகுவாய் மலையரசியே
சொல்லுதல் கூடுமோ எம்துயர், கண்ணனின்
சோதரீ ஓடி வருக
துணையிங்கு வேறில்லை, அன்னையே உனையன்றி
சுந்தரீ வருக வருக
தில்லையம் பலவனின் வாமத்தில் அகலாத
தெய்வமே ஆதிஉமையே
தெல்லிப் பழைப்பதியில் கோயில்கொண் டருள்கின்ற
செல்விதுர்க் காதேவியே!

தனங்கிளப்பூர் வ.சின்னப்பா

### தெல்லியூராளே துர்க்கையே நீவாவா! காப்பாயே!

அம்மா தாயேநீ வாவாவா அன்பு இறைவி நீவாவா
அம்மா அருளே நீதாதா ஆதிநீ சக்தி நீவாவா
சிம்ம வாகினி நீவாவா சிவ வைஷ்ணவி நீவாவா
சண்டி காளியே நீவாவா சரஸ் வதியே நீவாவா
நிம்மதி சேரவே நீவா நீதியே வாழ்வே நீவாவா
நல்ல அறமே நீவாவா நல்ல துர்கா நீவாவா
தெம்பே சமாதா னிநீவா தீவினை தீரவே நீவாவா
துர்கா எம்மு ள்ளேவா தெல்லி யூராளே காக்க

நல்லூர் சிவமுருகன் தமிழ்மகன் நந்தகுமார்

### உன்னை நினைத்தால் வாழலாம்

உன்னை நினைத்தால் வாழலாம்
உலகை வென்றே ஆளலாம்
எண்ணிய எல்லாம் அடையலாம்
ஏற்றம் பெற்றே உயரலாம்
கண்ணிய உன்புகழ் பாடலாம்
காரியம் யாவும் நிறைவேற்றலாம்
மண்ணில் ஆட்சி செய்யலாம்
மாண்புகள் ஆயிரம் சேர்க்கலாம்

மதுரகவி

### போரினைப் போக்கிடுவாய்

எங்கும் நிறைந்திருக்கும் எம்தாயே துர்க்கையம்மா
சிங்கத்திலேறி வரும் அருளுருவே எங்களம்மா
தங்கச் சிலைபோல உன்னழகைப் பார்க்கின்றோம்
மங்கள வாத்தியத்துடன் நாமும்மைத் தொடர்கின்றோம்
சங்கொலியும் கேட்குதம்மா எம்குறைகள் சொல்வதற்காய்
மங்கையர் மனத்துயரை மகிழ்வுடனே தீர்ப்பதுடன்
எங்கள் பிரச்சினைக்கும் நீயிரங்க வேண்டுமம்மா
பங்கமுடனிருக்கும் எம் நாட்டுப் போரினை போக்கிடுவாயின்றே

எஸ்.எஸ்.காசிப்பிள்ளை


# கதிர்காமர் படுகொலை விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளையும், கொலையை மேற்கொண்ட சந்தேக நபர்களையும் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள் ளபபடடு வருவதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி சரோஜினி குசல வீரவர்த்தன முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குற்றப் புலனாய்வுப் பிரிவு இத் தகவலைத் தெரிவித்தது. கொலை தொடர்பாக தற்போது இரண்டு சந்தேக நபர்கள் தடுத்து வைக் கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

கதிர்காமர் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் கதிர்காமரின் வீட்டை படம் பிடிககும் போது கைது செய்யப்பட்ட இருவரையும் மற்றும் கதிர்காமரின வீட்டுக்கு அருகில் வைத்து கைதுசெய்யப்பட்ட நபரையும் இம் மாதம் 27 ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ந-8)

# தமிழ் விழா

(தனங்கிளப்பு)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த தமிழ்விழா இன்று காலை10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் தலைவர் கு.சுஜீவன் தலைமையில நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரியர் சி.கா.திருச்செல்வம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ் வளர்த்த தாமோதரனார் சிலையை இளைப்பாறிய ஆசிரியர் இ.செல்லததுரை (சிறுவை கிழார்) திறந்துவைப்பார். "காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த தமிழர் தம் பண்பாடு இன்றும் பேணப்பட்டு வருகிறதா? இல்லையா?" என்ற பொருளில் விவாதம் நடைபெறும்.

(கு-37)

# மஹிந்தவின் நடவடிக்கைகளை ஆட்சேபிக்க சந்திரிகாவுக்கு தார்மீக உரிமை ஏதுமில்லை

## சந்திரிகாவின் வழியையே மஹிந்த பின்பற்றுவதாக தினமணி நாளிதழ் தலையங்கத்தில் விமர்சிப்பு

(கொழும்பு)

**தனது அரசியல் இலாபத்திற்காக ஜே.வி.பியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயருடன் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தற்போது இதேபாணியில் அரசியல் ஆதாயத்திற்காக ஜே.வி.பியுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதை ஆட்சேபிப்பதற்கு தார்மீக உரிமை எதுவும் அவருக்குக் கிடையாது என விமர்சித்துள்ளது தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளிதழ்.**

ஒரே வாரத்திற்குள் இலங்கையின் அரசியல நிலை குழப்பத்திற்குள் உள்ளாகியிருப்பதாக நேற்று முன்தினம் தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளிதழ் தனது தலையங்கத தில் செய்திவெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக நியமிக்கப் பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி யுடன் கலந்தாலோசிக்காமலே பேரினவாதக் கட்சி யான ஜே.வி.பியுடன் தேர்தல் உடன்படிக்கை செய்துகொண்டதற்கு ஜனாதிபதி தனது அதி ருப்தியைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இவ் ஆண்டின் இறுதியில் தனது பதவிக் காலம் முடிவடைவதால் அடுத்த ஜனாதிப தித் தேர்தலில் சட்டப்படி போட்டியிடமுடியாது என்பதால் இப்பொழுதே தன்னை ஒதுக்கி விட்டு ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் அளவுக்கு மகிந்த ராஜபகஷ சென்றி ருப்பதாக ஜனாதிபதி குமுறியிருப்பதில் அர்த தம் இருப்பதாக தினமணி நாளிதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

அதனைவிட ஜே.வி.பி விதித்த இரு முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் பிரதமர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டி ருப்பது ஜனாதிபதிக்கு அதிர்ச்சி அளித்துள் ளது.

*சுனாமியினால் சேதமடைந்துள்ள ஈழக் கடலோரப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு அளிப் பதறகாக தமிழீழ விடுதலைப்புலிகளும் அங்கம் வகிக்கும் வகையில் ஜனாதிபதியால் மேற்கொள் ளபபட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை அமுல்படுத்தக்கூடாது.

*இலங்கையில் அரசியல் அமைப்பு ஒருமுக நிர்வாகக் கட்டுக்கோப்பினைத் தற்போது கொண் டிருந்துவரும் இதேநிலையினை நீடிக்கவேண் டும். எக்காரணத்தைக் கொண்டும் இவ் அரசி யல் அமைப்பு கூட்டாட்சி கொள்கையடிப்படை யில் மாற்றியமைக்கப்படக்கூடாது.

ஆகிய இரண்டு உடன்பாடுகளும் கட்சியன் முக்கியஸ்தர்களை விசனம் அடையச் செய் துள்ளது.

இந்த இரண்டாவது நிபந்தனையே ஜனாதி பதியை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியிருக் கின்றது எனத் தெரிவிக்கும் தினமணி நாளிதழ், சுதந்திரக் கட்சியின் ஆட்சிமன்றக் குழு தன் பொறுப்பில் இருந்து வருகின்றது. அக் குழுவே தேர்தல் கொள்கையறிக்கையை வகுக்கக்கூடி யது என்பதையும் ஜனாதிபதி நினைவூட்டத் தவறவில்லை எனவும் தெரிவிததுள்ளது.

இந்நிலையில் அரசியல் இலாபத்துக்காக ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ உடன்பாடு கண்டிருப்பதற்கு ஒரு விதத்தில் வழிகாட்டி யவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என் பதை மறுப்பதற்கில்லை என நினைவுபடுத் தியுள்ள தினமணி,

ஈழப்பிரச்சினையில் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையேயான பேச்சுவார்த்தைகளில் படிப் படியான முன்னேறறம் ஏற்பட்டுவந்த சமயத்தில் பாராளுமன்றத்தில பெரும்பான்மைப்பலத் துடன் ஆட்சி நடாத்தி வந்த ரணில் அரசினை தனது சிறப்பதிகாரத்தினைப் பிரயோகித்து திடீரென பதவி நீக்கம் செய்ததுடன் பாரா ளுமன்றத்தையும கலைத்து புதிய தேர்தலுக்கு கடந்த ஆண்டில் உத்தரவிடடவர் ஜனாதிப தியே எனவும் சுட்டிக்காடடியுள்ளது.

அந்த நடவடிக்கை அரசியல் அடிப்படை யில எடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் இலங் கையின் பெரும்பான்மை இனத்தினர் ஆட்சி யினை நடாத்த வேண்டும் என்பதுடன் அதற்குட் பட்ட தமிழர்கள் உட்பட சிறுபான்மையினர் வாழவேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்ட ஜே.வி.பியுடன் அரசியல் இலாபத்துக் காகவே தேர்தல் உடன்படிக்கையைச் செய் யவும் தவறவில்லை.

அத்தோடு தேர்தலில் வெற்றிபெற்றபின் அக்கட்சியைச் சேர்த்துக்கொண்டு கூட்டரசி னையும் அமைக்க ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தயக்கம் காட்டாத நிலையில் அதேபாணி யில் அரசியல் ஆதாயத்துக்காக அவருடைய பரதமர் ராஜபக்ஷ அவர் காட்டிய வழியினைப் பின்பற்றினால் அதனை ஆட்சேபிப்பதற்கு தார் மீக ரீதியான உரிமை ஜனாதிபதி சந்திரிகா வுக்குக் கிடையாது.

ஆயினும், சுதந்திரக்கட்சியின் இந்த சந்தர்ப் பவாத அரசியல் புலிகள் தரப்பிலான நியா யத்தை வலுப்படுத்துவதாகக் கருதுவதில் அர்த்தமில்லாமல் போகவில்லை எனவும் அந்நாளிதழ் தனது தலையங்கத்தில் மேலும் சுட்டிககாட்டியுள்ளது. (ந-4)

# ஆசிய மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டி

## ஒரு பார்வை

தென்கொரியாவின் இன்சியோன் நகரில் இம்முறை 16 ஆவது ஆசிய மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன.

வழமைபோலவே இம்முறையும் சீனாவே தனது ஆதிக்கத்தினை நிலைநாட்டியது.

செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகிய இப்போட்டிகள் 4ஆம் திகதி வரை நடைபெறறன.

சீனா தனது வழமையான பாணியில் 15 தங்கம், 7 வெள்ளி, 10 வெண்கலம் அடங்கலாக 32 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியில் முத லிடத்தினைப் பெற்றது.

பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் 15 ஆவது ஆசிய மெய்வன்மை சம்பியன்ஷின் போட்டியில ஒரேயொரு தங்கப் பதக்கத்தைப் பெற்ற ஜப்பான் தனது நிலையினை இம்முறை உயர்த்தி 6 தங் கப் பதக்கங்களைச் சுவீகரித்து இரண்டாமிடத் தைப் பெற்றுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை இம்முறை 2 பதககங்களுடன், 2 வெள்ளி, 2 வெணகலம் அடங்கலாக 6 பதக்கங்களைப் பெற்று பதக்கப் பட்டியலில் 5ஆவது இடத்தைப பிடித்துள்ளது.

முதல் இருநாட்களில் இலங்கைக்கு எந்த வொரு பதக்கமும் கிடைக்கவில்லை. போட்டி யின் இரண்டாம் நாள் இலங்கையர்கள் பங்கு பற்றிய 7 போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் ஆண்களுக்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டத் திற்கான முதல் சுற்றில் இலங்கை அணிக்குழு முதலிடம் பெற்றது. இதுவே இரண்டாம் நாள் இலங்கைக்கு கிடைத்த உயர்ந்த பெறுபேறாகும்.

இக்குழுவில் ரொஹான பிரதீப்குமார, ரோஹித புஷ்பகுமார, லங்கா பெரேரா, சம்பத் அமரசேகர ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இரண்டாம் நாள் ஏனைய போட்டிகளில் இலங்கை வீரர்கள் சோபிக்கவில்லை.

நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் 200 மற்றர் போட்டிகளில் இலங்கையைப் பிரதி நிதித்துவப்படுத்திய தமயநதி தர்ஷி தங்கப் பதக கத்தைப் பெற்றார். அவர் போட்டித் தூரத்தை 22.84 விநாடிகளில் ஓடிமுடித்தார்.

இலங்கைக்கான மற்றொரு தங்கப் பதக்கததை உயரம் பாய்தல் போட்டியில் மஞ்சுள குமார பெற்றுக்கொடுத்தார். அமெரிக்காவில் தஙகிப் பயிற்சி பெறும் அவர் 2.27 மீற்றர் பாய்ந்து இலங்கைக்கு பதக்கத்தைப பெற்றுக்கொடுத்தார்.

4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் இலங்கை வெள்ளிட் பதக்கத்தைப பெறமுடிநதது.

இதேவேளை, ஆண்களுக்கான 400 மீற்றா போட்டியில் பிரசன்ன அமரசேகர வெள்ளிப் பதக கத்தையும், இலங்கையின் தேசிய சாதனை யாளரான ரொஹான் பிரதீப் குமார வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான ஈட்டி ஏறிதல் போட்டியில ஆன்கேஷானி சில்வா இலங்கைக்கு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

இதேவேளை, இபபடியான உலகத் தரவரி சைட் போடடியில் பங்குபற்றச் செல்லும் இலங்கை வரர்கள் தலைமறைவாகி வருவது வழமை யாக நடைபெறும் நிகழ்ச்சி. இம்முறையும இது நடைபெறாமல் இருக்கவில்லை.

இப்போட்டியில் இலங்கையின் சார்பில் 32 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்க ளிடம் விளையாட்டுத்துறை அமைச்சு 10 இலட சம் ரூபா பிணை கோரியிருந்தது. இருந்தும் மூன்று போட்டியாளர்கள் தலைமறைவாகி யுள்ளனர்.

4x400 மீற்றர் ஓட்டவீரர் சமிந்த மெண்டிஸ், டபிள்யூ.வி.எஸ்.ரவீந்திரகுமார, 110மீற்றர் தடை

**நோயல்**

தாண்டல் போட்டியாளர் இந்திக்க குமார டிசில்வா அகியோரே இம்முறை தலைமறைவானவர்கள்.

இதேவேளை, இம்முறை போட்டிகளை நடாத்திய தென்கொரியா ஒரு தங்கம், 7 வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட மொத்தமாக 9 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் 7 ஆவது இடதைப் பிடித்துக்கொண்டமை குறிப் பிடத்தக்கது.

**பதக்கப் பட்டியல்**

(முதல் 10 இடங்களைப் பெற்ற நாடுகளின் விபரம்)

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.சீனா | 15 | 07 | 10 | 32 |
| 2.ஜப்பான் | 06 | 05 | 12 | 23 |
| 3.கட்டார் | 06 | 03 | 03 | 12 |
| 4.இந்தியா | 04 | 05 | 04 | 13 |
| 5.சவூதி அரேபியா | 04 | 01 | 01 | 06 |
| 6.இலங்கை | 02 | 02 | 02 | 06 |
| 7.தென்கொரியா | 01 | 07 | 01 | 09 |
| 8.உஸ்பெகிஸ்தான் | 01 | 03 | 01 | 05 |
| 9.தாய்லாந்து | 01 | 01 | 01 | 03 |
| 10.ஈரான் | 01 | 00 | 02 | 03 |

# கொழும்பில் 4 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

தொம்பே பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் 4 பேரின் சடலங்களை பொலிஸார் நேற்று முன்தினம் கண்டெடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டி ருந்த வாகனமொன்றுக்குள்ளிலிருந்தே இந்த 4 சடலங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலங்களாக மீட்கப்பட்ட இந்த 4 பேரை யும கொலையாளிகள் கடத்திச் சென்று கொலை செயதிருக்கலாம் என்று மேல் மாகாண பிரதிப பொலிஸ்மா அதிபர் அசோக வீரிய திலக தெரி வித்தார்.

கொலையாளிகள் சிவப்பு நிற வான் ஒன் றில் ஏறி தப்பிச் சென்றுள்ளதாக தமக்குத் தகவல கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

இதேவேளை, நேற்று நீர்கொழும்பு பகுதி யில பட்டாசு தொழிற்சாலையொன்றில் ஏற் பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் கொல்லப்பட் டுள்ளனர். மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர். தொழிறசாலைக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ள தாக வும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-8)

# தகராறுகள் அதிகரிப்பு

(துன்னாலை)

யாழ்மாவட்டத்தில் இயங்கிய விடுதலைப் புலிகளின் அரசியல் துறை செயலகங்கள் தறபோது இயங்காததால் தகராறுகளும் குற்றச செயல்களும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக சிறு சிறு பிணக்குகள் ஏற்படும் வேளைகளில் பலரும் அரசியல் துறைக்குச் சென்றே அவற்றைத் தீர்த்து வந்தனர்.

தற்போது அரச கட்டுப்பாட்டு பகுதியில் இருந்த விடுதலைப்புலிகளின் செயலகங்கள் வாபஸ்பெறப்பட்டதால் சிறுபிரச்சினைகள் ஏற் படும்வேளை தீர்க்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

இதேவேளை, பொலிஸாரும் தமது பாது காப்புக் கருதி வீதிகளில் நடமாடாமல் பொலிஸ் நிலையங்களுக்குள் முடங்கிக் கிடப்பதால் கோஷ்டி மோதல்களும் நாளுக்கு நாள் அதி கரித்து வருவதைக் காணக்கூடியதாகவுள் ளது. (த-101)

## விண்ணப்பப்படிவங்கள்

(கோப்பாய்)

2005இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பணியாட்களைத் தேர்நதெடுப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்.மாவட்டத் தெரி வத்தாட்சி அலுவலரினால் பாடசாலைகட்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்படிவங்களைப் பூர்த்தி செய்து ஒரு வாரத் தில் தமக்குத் திருப்பி அனுப்பிவைக்குமாறு கூறப்பட்டுள்ளது. (த-79)

**கரப்பந்தாட்ட இறுதியாட்டம்**

# 3:0 செற் கணக்கில் சம்பியனானது அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

(சுண்டுக்குளி)

ஆவரங்கால் மத்திய விளையாடடுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கததின் அனு சரணையுடன யாழ்.மாவட்ட ரீதியில் நடாததிய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணி தொடக்கம் ஆவரங்கால் மத்திய விளையாட் டுக் கழக ஆடுகளததில் விளையாட்டு கழகத தின் தலைவர் கே.சிவஜோதி (ஜே.பி) தலை மையில் மின்னொளியில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற 3 ஆம் இடத்திற் கான தெரிவு ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய யாழ்.பல்கலைக்கழக விளை யாட்டு விஞ்ஞான அலகு அணியை 3:1 என்ற செற் கணக்கில் 25:18, 25:10, 15:25, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணியை 3:0 எனற செற் கணக்கில் 25:18, 25:16, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெகு இலகுவாக வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை தன்தாக் கிக்கொண்டது.

இவ்விரு ஆட்டங்களுக்கும் நடுவர்களாக எஸ்.அடபுத்துரை, எம்.காந்தன் ஆகியோர் கடமை யாறறினார்கள்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும், சிறப்பு விருந்தினர் களாக யாழ்மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலை வர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம்(ஜே.பி), பல் கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின விரிவுரையாளர் திருமதி பவானி அகிலன், ஆவ ரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய அதிபர் ஏ.அருணந்திசிவம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-110)

# குரு மாற்றம்

# உங்களுக்கு எப்படி?

## 19-09-2005 முதல் 20-10-2006 வரை



## மகரம்

**உத்திராடம்-2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

அன்பார்ந்த மகர இராசி வாசகர்களே! எதிலும் எப்போதும் நிதானமாகவும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் விளங்கும் உங்களுக்கு பாக்யஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் 19-9-2005 முதல் 20-10-2006 முடிய தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளார். உங்கள் இராசியாதிபதி சனி பகவான் சம சப்தம ஸ்தானமான 7ஆம் வட்டில் சஞ்சாரம செய்வதாலும் குரு 10இல் சஞ்சரிப்பதாலும் உங்களுக்குத் தொழில், பொருளாதார ரீதியாக அனுகூலமற்ற நிலையே ஏற்படும். தொழிலில் கூட அதிகப்படியான எதிர்ப்புகள் உண்டாகும். நெருங்கிய நண்பர்கள் துரோகம் செய்வார்கள். குடும்ப வாழ்வில் ஒற்றுமையில்லாத நிலை நீடிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் வழக்கு, வம்புகள் ஏற்பட்டு மன அமைதி குறையும். தகுதிக்குக் குறைவான வேலையில் நீடிக்க நேரிடும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்களுக்கு மேலும் மேலும் சங்கடங்கள் ஏற்படும். குறிப்பாக சர்ப்ப கிரகமான இராகு பகவான் உங்கள் இராசிக்கு முயற்சி ஸ்தானமான 3ஆம் வீட்டில் 21-9-2006 முடிய சஞ்சாரம் செய்வதால் நீங்கள் எடுக்கும் முயற்சியில் அனுகூலங்கள் உண்டாகும். சிறு சிறு தடைகள் நிலவினாலும் ஏற்றமிகு பலனை அடைவீர்கள்.

### ஆரோக்கியம்

உங்களுடைய ஆரோக்கியம் மிகவும் பாதிக்கும். ஜலம், பித்த சம்பந்தமான சில சங்கடங்கள் உண்டாகி சிலருக்குச் சிறு அறுவைச் சிகிச்சையும் செய்ய நேரிடும். புத்திரர்களின் வழியில் மனச்சஞ்சலங்களையும், மனைவி வழியில் பிரசவக் கோளாறுகளையும் சந்திக்க நேரிடும். பொருளதார நிலை சரியாக இருக்காது. எனவே, மனதில் கவலையும் சரியான உறக்கமில்லாத நிலையும் உண்டாகும். சோர்வு, அலைச்சல், டென்ஷன் உண்டாகும்.

### செல்வம், செல்வாக்கு

செல்வம், செல்வாக்கு ரீதியாகத் தேவையற்ற சிக்கல்களில் சிக்கிக்கொள்ள நேரிடும். பெரும் தொகை தருவது கண்டிப்பாக தவிர்ககப்பட வேண்டும். கடன் தொல்லை அதிகமாகும். வம்பு, வழக்குளில் சாதகமற்ற போக்கும், ஸ்திர சொத்து இழப்பும் ஏற்படலாம் புதிய முயற்சிகளில் தடையும், யாரையும் நம்பமுடியாத நிலையும் உண்டாகும் அசையாச் சொத்து செலவினை ஏற்படுத்தும். வம்பு, வழக்குளில் சாதகமற்ற பலன் கிட்டும். சிலருக்கு கைப்பொருளை இழக்கும் நிலை ஏற்படும்.

### குடும்பச் சூழ்நிலை

குடும்பத்தில் குழப்பமான நிலை காணப்படும். எடுக்கும் காரியம் முடியாமல் இழுபறியாகும். சகோதரர்களிடையே எப்போதும் சலசலப்புக் காணப்படும் மனதில் அதிகமான கவலைகளும் கணவன் - மனைவியிடையே உறவில் பிரிவும் மனவேறுபாடுகளும் தோன்றும் வண்டி, வாகனம் பழுதடையும். பிறரிடம் வம்பு, வழக்குள் செய்ய நேரிடும். அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் அனுசரித்து நடக்கவேண்டும். திருமண சுபகாரியம் தடை ஏற்படுத்தும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

எதிர்பாராத இடமாற்றத்தால் குடும்பத்தை விட்டப் பிரிந்து வாழ நோடும். சிலருக்கு தேவையற்ற வெளியூர்ப் பயணம் அனுகூலமற்று அமையும். ஊதிய உயர்வையும் பதவி உயர்வையும் தற்போது எதிர்பார்க்க முடியாது. உடல்நலக் குறைவால் அடிக்கடி விடுப்பு எடுக்க நேரிடும். புதிய வேலை அமைவதில் தடையும் தாமதமும் உண்டாகும். வேலைப்பளுவும் பொறுப்புகளும் கூடும். அலைச்சலும் டென்ஷனும் கூடும். எடுக்கும் காரியம் எதுவும் தாமதப்படும்.

### தொழிலதிபர்களுக்கு

தொழில் மறைமுகப் போட்டிகளும், பொறாமைகளும், எதிரிகளின் தொல்லைகளும் ஏற்படும். சிலர் நஷ்டத்தையும் எதிர்கொள்ள நேரிடும். புதிய முயற்சிகளை மேற்கொள்வதை சாதகமற்ற பலனையே உண்டாக்கும். கூட்டுத்தொழிலில் பிரச்சினைகள் உருவாகி மன அமைதி குறையும் எடுக்கும் காரியம் எல்லாம் தாமதப்படும்.

### மங்கையருக்கு

கோபம் அதிகம் உண்டாகும். எரிச்சல் சோர்வால் வாடிப்போய்க் காணப்படுவீகள். குடும்பத்தில் கணவர், கணவர் குடும்பத்தாரை அனுசரித்துப் போக இயலாது. பணியிலும் கூடுதல் உழைப்பு, ஓய்வின்மை போன்றவை டென்ஷனை ஏற்படுத்தும். சில பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறு உண்டாகும்.

### கல்விநிலை

உங்களுக்கு சோம்பலும், சேர்வும் காணப்படும். கண்ணும் கருத்துமாகப் படித்தால்தான் ஏற்றம் அடைய முடியும். தொழில்நுட்ப மாணவர்களின் முயற்சி தடைபடும். ஞாபக மறதியும். கவனக் குறைவும் ஏற்படும். ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்நுட்பம் பயல்பவர்கள் தடைகளைக் கண்டு மனம் தள்ரக்கூடும்.

### கலைஞர்களுக்கு

புதிய வாய்ப்புகள் கிடைப்பதில் போட்டா போட்டிகள் நிலவும். உங்கள் அலட்சியப் போக்கினால் நல்ல வாய்ப்புகளை இழக்கும் சூழ்நிலை ஏற்படும். அசையாச் சொத்துக்கள் செலவினை ஏற்படுத்தும். மந்தமான பொருளாதார நிலைகளையும் உடல் ஆரோக்கியத்தில் சோர்வு, அலைச்சல், டென்ஷனையும் சந்திப்பீர்கள். எடுக்கும் காரியம் தடை, தாமத்தினை ஏற்படுத்தும். மறைமுகமாக எதிரிகள் சிலர் சோதன்னகளை ஏற்படுத்துவார்கள். சிலருக்கு அரசால் பாராட்டைப் பெறத் தடையாகும்.

### விவசாயிகளுக்கு

உங்கள் பயிர்களில் புழு, பூச்சிகளின் தொல்லைகள் அதிகமாகும. அவற்றைக் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுப்பதில் தாமத நிலையும், இடையூறுகளும் உண்டாவதால் பயிர் சேதமடையும். அரசு மூலம் எதிர்பார்த்த உதவிகள் அமைவதில் தடை உண்டாகும் தானியங்களுக்கு நல்ல விலை கிடைக்காது. தேவையில்லாமல் வீண் வம்பு ஏறபடும.

### இளைஞர்களுக்கு

உங்களுடைய வேலையில் கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பினும் சரியான நேரத்திற்கு உங்கள் வேலைகளைச் செய்ய முடியாது. மறைமுக எதிரிகளும் தொல்லை தருவார்கள். புதிய வேலை கிடைக்கத் தாமதமாகும். பலமுறை அலைய நேரிட்டாலும் வீணாக அலைக்கழிக்கப்படுவீகள். பலன் ஏதுமிராது.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

சோதனைகளால் மன அமைதி குறையும் காலமாகும். எடுக்கும் எந்தவொரு செயலையும் உடனடியாக முடிக்க முடியாது. குடும்பத்தில் அதிக மருத்துவச் செலவுகள் உண்டாகும். கர்ப்பக் கோளாறுகள், மாதவிலக்குக் கோளாறுகளால் மகளிருக்கு அதிக சோர்வு ஏற்படும். உற்றார், உறவினர் எதிர்பாராமல் விரோதமாவார்கள். பொருளாதார நிலையில் பற்றாக்குறையும், கடன் தொல்லைகளால் அவமானப்படும் சூழ்நிலையும் உருவாகும். கொடுக்கல், வாங்கலில் நெருக்கமானவர்களே ஏமாற்ற எண்ணுவார்கள். திருமண சுபகாரிய முயற்சிகளுக்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்படும். கணவன் மனைவியிடையே அடிக்கடி வீண் பிரச்சினைகள் உருவாகும். உத்தியோக நிலையில் அடிக்டி விடுப்பு எடுத்து அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள நேரும். தொழில் ரீதியாகக் கவலை தரும் சம்பவம் நடைபெறும் இலாபம் குறைந்து போட்டி, பொறாமைகள் அதிகமாகும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

இக்காலத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் உண்டாகும். வெளியூர்ப் பயணங்கள், அலைச்சல், டென்ஷனை ஏற்படுத்தும். ஆனாலும் அனுகூலமான பலனையும் அடைவீர்கள். அரசியல்வாதிகளுக்கு பெயர், புகழ், நற்பலன்கள் உண்டாகும். கலைஞர்களுக்கு மந்தமான நிலை மாறும். விவசாயிகளுக்கு மழைப் பொழிவு உண்டாகும். ஓரளவுக்கு விளைச்சல் கிட்டும். மாணவர்கள் நல்ல முயற்சியினால் நற்பலனை அடைவார்கள். குடும்பத்தில் பொருளாதார நிலையில் படிப்படியான உயர்வு ஏற்படும். கடன் தொல்லை குறையும். திருமண முயற்சியில் நற்பலன் கிட்டும். பொருளாதாரத்தில் சுமாரான பண வரவுகள் உண்டாகும். வண்டி, வாகனம் பழுது பார்ப்பீர்கள். தொழில், வியாபாரம், கூட்டுத் தொழிலில் முன்னேற்றமும் இலாபமும் சுமாராக அமையும் மனக் குழப்பம் வில்கி கணவன் - மனைவியிடையே ஒற்றுமை பலப்படும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

இக்காலத்தில் நிதானமாகச் செயல்பட்டால் ஓரளவுக்கு நன்மைகள் கிடைக்கும் சூழ்நிலை உண்டாகும். உடல்நலம் படிப்படியாகத் தேறிவிடும். மனைவி நலனடைவாள். புத்திரர்களால் ஏற்பட்ட மன உளைச்சல்கள் மறையும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எடுக்கும் காரியம் யாவும் சற்று தாமதமானாலும் முடித்துவிட முடியும். பொருளாதார நிலையில் சில சமயம் பண வரவுகள் இருக்கும். சில சமயம் நெருக்கடி உண்டாகும் சிக்கனமாகச் செயல்பட்டால் கடன்கள் குறையும் திருமண சுபமுயற்சியை மேற்கொள்ள முடியும். தொழில், வியாபார நிலையில் சில போட்டிகள் நிலவினாலும் ஓரளவுக்கு இலாபமும் முன்னேற்றமும் உண்டாகும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் கவனமாகச் செயல்படவேண்டும. உத்தியோக நிலையில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு தாமதப்படும். மாணவர்களின் கல்வியில் ஏற்றம் உண்டாகும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

உங்களுக்கு இக்காலத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் ஏற்படும். உடல் நலனில் சிறு சிறு பாதிப்புகள் ஏற்பட்டாலும் பிற்பாதியில் நலம் உண்டாகும். மருத்துவச் செலவுகளும் படிப்படியாக விலகும். மனைவி மற்றும் புத்திரர்களின் உடல்நலம் நன்றாகவே அமையும் குடும்பத்தின் பொருளாதார நிலை சுமாராக இருக்கும். நிறைய பணவரவுகள் ஏற்பட்டாலும் சில செலவுகளும் உண்டாகும். சேமிக்க முடியாது. வண்டி, வாகனம் பழுதுபார்க்க முடியும். தொழில், வியாபார நிலையில் படிப்படியான உயர்வும் இலாபமும் ஏற்படும். உடன் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை அனுசரித்துப் போனால் தொழில், உத்தியோக நிலையில் நற்பலன்களை அடையமுடியும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

இக்காலத்தில் உங்களது மனநிலையில் குழப்பமான நிலையிருக்கும். எதைச் செய்வது, எப்படிச் செய்வது எனத் தவிப்பீர்கள். உற்றார், உறவினர்களும் அடிக்கடி வந்து பணம் கேட்டு நச்சரிப்பார்கள். இல்லையென்றாலும் நம்பமாட்டார்கள். செலவுகளும் கைமீறிப்போகும். பணவரவுகள் தடைபடும். கடன் தொல்லையால் நெருக்கமானவர்களையே விரோதித்துக்கொள்வீர்கள். திருமண சுபகாரியம் தடைபடும். தொழில், வியாபார நிலையில் கடுமையான சோதனைகளை எதிர்கொள்ள நேரிடும். இலாபம் இருக்காது. பொருள் தேக்கம் அரசாங்க வழியிலும் தொடர்ந்து சோதனைகள் ஏற்படும். உத்தியோக நிலையில் அதிகாரிகளுடன் சிறப்பான அனுசரிப்பு இருக்காது.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

உங்கள் உடல்நலனில் அதிகமான அக்கறை செலுத்த வேண்டும். அடிக்கடி வெளியூர்ப் பயணம் ஏற்பட்டு அதிக அலைச்சலையும் டென்ஷனையும் பண விரயத்தையும் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் நிம்மதி குறைவு கணவன் -மனைவியிடையே கருத்து வேறுபாடு மேலோங்கும் பணத்தட்டுப்பாடுகள், கடன் தொல்லைகள் மன அமைதியைக் குறைத்துவிடும். யாரையும் நம்பி ஜாமீன் கொடுப்பது, பெரும் முதலீடுகள் செய்வது கூடாது. திருமண சுபமுயற்சி தடைபடும். தொழில், வியாபார நிலையில் மிகவும் மந்தமான நிலையும் போட்டி, பொறாமைகளைச் சந்திக்கும் சூழ்நிலையும் உண்டாகும். கெட்ட நண்பர்கள் பேச்சை எடுக்காமல் முயற்சியை மேற்கொண்டு மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும்.

### நட்சத்திரப் பலன்கள்

**உத்திராடம் 2 , 3, 4 ஆம் பாதங்கள்:**

கொடுக்கல் வாங்களில் மிகவும் எச்சரிக்கை தேவை. பெரும் தொகைளையும் வாக்குறுதிகளையும் கண்டிப்பாகத் தவிக்க வேண்டும் நெருங்கிய நண்பர்களே பகையாக மாறிவிடும் சூழ்நிலையால் உள்ளம் கவலை கொள்ளும். அரசியலில் வீண் பழிகள் தேடிவரும். சிக்கனமாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஜோதிட மேதை
பாலமுருகன்

**திருவோணம்:**

வேலையாட்களால் தொழிலில் சிக்கல் உண்டாகும். நவீன தொழிற்கருவிகள் எதிர்பாராமல் பழுதடையும். உற்பத்தி பாதித்த சிலர் கடனாளியாவார்கள். கூட்டாளிகளிடம் மிகவும் கவனத்துடன் இருப்பது உத்தமம். சிலருக்கு பிரிந்துவாழும் நிலை உண்டாகும். கணவன் -மனைவியிடையே வீண் சண்டை, சச்சரவுகள், நிம்மதியில்லாத சூழ்நிலை உண்டாகும்.

**அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்:**

எந்தவொரு காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது மிகவும் உத்தமம். தேவையில்லாத விஷயங்களுக்காக கணவன் -மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். விட்டுக்கொடுத்து அனுசரித்துப் போவதால் மன அமைதி பாதிக்காது. எதிர்பாராதபடி உத்தியோக நிலையில் மாற்றம் உண்டாகும். கலைஞர்களுக்கு போட்டிகள் உருவாகும்.

**பரிகாரம்:**

உங்கள்இராசிக்கு தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டில் குருபகவான் சஞ்சரிப்பதால் குரு தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமைகளில் தரிசிப்பதும் அருகிலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று தட்சிணாமூர்த்திக்கு 9 நெய் விளக்குகளை ஏற்றி குரு மந்திரம், குரு காயத்ரியை ஜெபித்து வந்தால் உங்கள் சோதனை யாவும் விலகி தொழிலில் ஏற்றம் ஏற்படும்.

கண்டச்சனி நடைபெறுவுதால் சனி பகவானுக்கு ப்ரீதி செய்து வருவதாலும், தொடர்நது ஆஞ்சனேயரை வழிபட்டு வருவதாலும், தினமும் காக்கைக்கு அன்னம் வைப்பதாலும் குடும்ப வாழ்வில் ஏற்படும் சோதனைகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

(தொடரும்...)

# சீக்கியர்களிடம் மன்னிப்புக் கோரும் இந்தியா தமிழீழத்திடம் எப்போது மன்னிப்புக் கேட்கும்?

(3) (தொடர்ச்சி...)

புலிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் என்று சந்தேகத்தின் பேரில் சிறைப்பிடிக்கப்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைச் சித்திரவதை முகாமான காங்கேசன்துறை முகாமுக்கு அனுப்பிவிடுவார்கள். அங்கு 750 சதுர அடி கொண்ட ஒரு வட்டில் 150 பேரை அடைத்து வைப்பார்கள். ஒரே ஒரு மலக்கூடத்தைத்தான் அத்தனை பேரும் பயன்படுத்த வேண்டும். சாப்பாடு ஒழுங்காக அளிக்கப்படுவது இல்லை. கைதிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5/= வழங்கப்படவேண்டும் என்பது விதிமுறை ஆகும். ஆனால், கைதிகளிடம் கையெழுத்து பெற்றுக் கொள்வார்களே தவிர பணத்தைக் கொடுக்க மாட்டாாகள். இராணுவ அதிகாரிகளே அவற்றை எடுத்துக் கொள்வார்கள். யாராவது தப்பித் தவறி இதைத் தட்டிக் கேட்டால் அன்று முழுவதும் அவருக்கு அடியும் உதையும்தான் கிடைக்கும்.

முன்பொருநாள் காங்கேயன்துறை முகாமுக்கு அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டு அவாகளது குறைகளைக் கேட்டு ஏதாவது உதவ' செய்வதற்காகச சென்ற மக்கள் குழுவில் ஆனந்தராஜாவும் ஒருவராக இருந்தார். அந்தக் கொடுமையான முகாம் பற்றி அவருக்கு ஏற்கெனவே தெரியும். அதனால்தான் அவரை அந்த முகாமுக்கு அனுப்பப் போவதாக அதிகாரிகள் மிரட்டினார்கள்.

"அந்த முகாமுக்கு அனுப்புவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நங்கள் என்னைச் சுட்டுக் கொன்றால் கூட நங்கள் கூறும் கழ்த்தரமான வேலைகளை நான் செய்யப்போவது இல்லை'' என ஆனந்தராஜா பதில் கூறினார்.

தங்களின மிரட்டல் பலிக்காத கோபத்தில் அதிகாரிக்ள் அங்கிருந்து சென்றனர். அவர் துயரம் அத்துடன் ஓயவில்லை. ஆகஸ்ட் 4 ஆம் நாள் அன்று காலை 10 மணியளவில் டாக்டர் சௌத்ரி மண்டும் வந்தார். ஆனந்தராஜாவிடம் ஒரு கோப்பைக் காட்டிக் கையெழுத்து போடும்படி வற்புறுத்தினார்.

"மிஸ்டர் ஆனந்தராஜா இங்கே அடைத்து வைக்கப்பட்டவர்களுள் 6 பேர் இறந்து போனார்கள். அவர்களின் அடையாளம் தெரியாததால் அவர்களை இங்கேயே தகனம் செய்துவிட்டோம்''

"டாக்டர், அவர்கள் இங்கே கொண்டு வரும்போது நன்றாகத்தானே இருந்தார்கள். அவர்கள் விடுதலைப்புலிகள் அல்லவே. அப்பாவிப் பொது மக்கள்தானே, திடீர் என அவர்கள் எப்படி இறந்தார்கள்'' என்று ஆனந்தராஜா கேட்டார். ஆனால் டாக்டர் எவ்விதப் பதிலும் சொல்லாமல

> **புலிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் என்று சந்தேகத்தின் பேரில் சிறைப்பிடிக்கப்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைச் சித்திரவதை முகாமான காங்கேசன்துறை முகாமுக்கு அனுப்பிவிடுவார்கள். அங்கு 750 சதுர அடி கொண்ட ஒரு வீட்டில் 150 பேரை அடைத்துவைப்பார்கள். ஒரே ஒரு மலக்கூடத்தைத் தான் அத்தனை பேரும் பயன்படுத்த வேண்டும். சாப்பாடு ஒழுங்காக அளிக்கப்படுவது இல்லை. கைதிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 5 வழங்கப்படவேண்டும் என்பது விதிமுறை ஆகும். ஆனால், கைதிகளிடம் கையெழுத்துப் பெற்றுக் கொள்வார்களே தவிர பணத்தைக் கொடுக்கமாட்டார்கள். இராணுவ அதிகாரிகளே அவற்றை எடுத்துக் கொள்வார்கள். யாராவது தப்பித் தவறி இதைத் தட்டிக் கேட்டால் அன்று முழுவதும் அவருக்கு அடியும் உதையும் தான் கிடைக்கும்.**

ஆறு பேரை எரித்ததற்கு ஆதாரமாக அவரிடமிருந்து கையெழுத்தைக் கட்டாயமாகப் பெற்றுக் கொண்டார்.

ஒரு மரண வட்டில் துக்கம் கொண்டாடுவதற்காக உறவினர்கள் வந்து கூடியிருந்தார்கள். திடீர் என அந்த வட்டை இந்திய இராணுவம் சுற்றி வளைத்துக் கொண்டது. ஆண்கள் அனைவரையும் வயது வேறுபாடு இல்லாமல் வெளியே இழுத்து வந்து வரிசையாக நிறுத்தி வைத்தார்கள். நங்கள் எல்லோரும் புலிகள், உங்களைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்று வெறிபிடித்தவன் போல ஒரு சிப்பாய் கத்தினான். துக்க வட்டில் இருந்த பெண்கள் எல்லோரும் வெளியே ஓடி வந்து சிபாய்களின் கால்களில் விழுந்து கதறினார்கள். ஆனால், அந்த மூர்க்கா கள'ன் மனம் இரங்கவில்லை.

> **வல்வெட்டித்துறையில் மூன்று நாள்களாகத் தொடர்ந்து நரவேட்டை நடத்திய இந்திய இராணுவம் அச் செய்திகளை அடியோடு மறைத்தது. இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் சற்றும் எதிர்பாராத விதமாகப் பொதுமக்கள் 24 பேர் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதன் விளைவாகச் சில வீடுகளும், கடைகளும் சேதம் அடைந்தன. இம்மோதலில் 6 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்று இந்திய இராணுவம் கூறிய அப்பட்டமான பொய்யை இந்திய வானொலியும், தொலைக்காட்சியும், பத்திரிகைகளும் வெளியிட்டன. இந்தக் கொடுமைகளை அடியோடு மறைப்பதற்கு முயற்சி செய்தன. ஆனால் அன்னிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகள் தாம் முதன் முதலாக இந்திய அக்கிரமங்களை அம்பலப்படுத்தின.**

ஆண்களையெல்லாம் அடித்து இழுத்துக்கொண்டு முச்சந்தியை நோக்கி நடந்தார்கள். அவர்களுக்கு பின்னால் அழுது கொண்டும் புலம்பிக்கொண்டும் ஓடி வந்த பெண்களை 'பூட்ஸ்' கால்களினால் உதைத்தும், துப்பாக்கிக் கட்டைகளினால் அடித்தும் விரட்டினார்கள். வல்வெட்டித்துறைச சந்தியை அடைந்ததும் அவர்களை ஒரு சாலையில் உட்கார வைத்தார்கள். முதல் நாள் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்க்ள் ஊதிப்போய் அங்கேயே கிடந்தன. சிலருடைய தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் எதிர்ப்புறமாக எரிந்த கடை ஒன்றின் முன்னால் நிற்க வைத்தார்கள். அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சம் எல்லோரையும் ஆட்டிப் படைத்தது. அங்கு நின்ற மற்றொரு சிப்பாய் அவ்வாறு நிறுத்தப்பட்ட ஆறு பேரையும் சுட்டுத் தள்ளினான். அந்த ஆறு பேரும் அந்த இடத்திலேயே அவாகளுடைய உறவினர்கள் பார்த்துக் கொண்டிருக்க துடிதுடித்து இறந்தார்கள்.

மனிதர்கள் மட்டுமல்லாமல் பறவைகளையும் இந்திய இராணுவம் விட்டுவைக்கவில்லை. வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து சிறிது தொலைவில் புச்சிபுத்தான் என்ற இடத்தில் இருந்த கோழிப் பண்ணையை இந்திய இராணுவம் கொளுத்தியதன் விளைவாக அங்கிருந்த 500க்கும மேற்பட்ட கோழிகள் எரிநது கருகிப் போயின.

வல்வெட்டித்துறைப் பிள்ளையார் கோயில் ஊரிலிருந்து சிறிது ஒதுக்குப்புறத்தில் அமைந்து இருக்கிறது. பொதுவாக எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் மக்கள் அங்கே ஓடி அடைக்கலம் புகுவார்கள. அன்றும் ஏறக்குறைய 400 பேர் வரையில் அந்த ஆலயத்திற்குள் தஞ்சம் புகுந்து இருந்தனர். அவாகளையும் இந்திய இராணுவம் விட்டுவைக்கவில்லை. கோவில் என்றும் பார்க்காமல் புட்ஸ் காலகளோடு வெறித்தனமாகப் பாய்ந்து ஓடி வந்தார்கள். உள்ளே நுழைந்த அவர்களின் கண்களுக்கு முதலில் பட்டவர்கள் கோயில் அர்ச்சகர்கள்தாம். அந்த இரண்டு அர்ச்சகர்களையும் கோவிலுக்குள் வைத்தே பலமாகத் தாக்கினார்கள். பிறகு அங்கிருந்த இளைஞர்களையெல்லாம தேடிப்பிடித்து அடித்து வெளியே சந்திக்குக் கொண்டு வந்தார்கள். மேலும், மற்றப் பகுதிகளில் பிடிபட்டவர்களையும அங்கே கூட்டி வந்தாாகள். கொதிக்கும வெயிலில் அங்கிருந்து உருண்டுகொண்டே உடுப்பிட்டியில் இருந்த இந்திய இராணுவ முகாம் நோக்கிச் செல்லுமாறு ஆணையிட்டார்கள். கொதிக்கும் தார்ச்சாலையின் சூட்டைப் பொறுக்கமுடியாமல் வேதனையுடன் உருண்டு உருண்டு சென்று கொண்டிந்த மக்களை மரக்கட்டைகளால் அடித்துக் கொண்டே சென்றார்கள்.

உடுப்பிட்டி முகாமிலும் மிகக் கொடுமையான சித்திரவதைகள் நடந்தன. அதன் விளைவாக இறந்த 11 பேரின் சடலங்களை முகாமுக்குள்ளேயே மற்றக் கைதிகள் முன்னால் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்கள். வல்வெட்டித்துறையில் மூன்று நாள்களாகத தொடர்ந்து நரவேட்டை நடத்திய இந்திய இராணுவம அச் செய்திகளை அடியோடு மறைத்தது. இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் சற்றும் எதிர்பாராத விதமாகப பொது மக்கள் 24 பேர் கொல்லப்பட்டனர்.

**பழ.நெடுமாறன்**

விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதன் விளைவாகச் சில வடுகளும், கடைகளும் சேதம் அடைந்தன. இம்மோதலில் 6 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்று இந்திய இராணுவம் கூறிய அப்பட்டமான பொய்யை இந்திய வானொலியும், தொலைக்காட்சியும், பத்திரிகைகளும் வெளியிட்டன. இந்தக் கொடுமைகளை அடியோடு மறைப்பதற்கு முயற்சி செய்தன. ஆனால், அன்னிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகள் தாம் முதன் முதலாக இந்திய அக்கிரமங்களை அம்பலப்படுத்தின. அதைப் போல சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசியா வாட்ச என்னும் உலக மனித உரிமை அமைப்புகள வல்வெட்டித்துறைப் படுகொலைகளைப் பற்றி விசாரணை நடத்தி இந்திய இராணுவத்தைக் கண்டனம் செய்தன.

வல்வெட்டித்துறை மக்கள் குழுவின் செயலாளரும் இந்திய இராணுவத்தின் பாதிப்புக்கு நேரிடையே ஆளானவருமான ஆனந்தராஜா தலைமையில் மக்கள குழு ஒன்று சென்னைக்கு வந்து சகல அரசியல் தலைவர்களையும் சந்தித்து இந்தக் கொடுமைகளை அம்பலப்படுத்தியது.

இக்குழு டெல்லிக்கும் சென்று பல அரசியல் தலைவர்களையும் சந்தித்து உண்மையை விளக்கிறறு. ஜனதா தளப் பொதுச் செயலாளரான ஜாாஜ் பொனாண்டஸ் இந்தப் பிரச்சினையை அம்பலப் படுததுவதில் முன்னின்றார். வெறும் வார்த்தைகளோடு அவர் நின்றுவிடவில்லை. வல்வெட்டித்துறைப் படுகொலை பற்றிய ஆதாரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியா முழுவதிலும் மட்டுமன்றி, உலகெங்கிலும் அனுப்பி இராஜவ் அரசின் முகமூடியைக் கிழித்து எறிந்தார். அவரின் இந்த முயற்சிக்குத் தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

## யாழ்.மருத்துவமனை

27.2.90 அன்று யாழ். போதனா மருத்துவமனைக்குச சென்றேன். இந்திய இராணுவம் செய்த கொடுமைகளுக்கெல்லாம் தலையாய கொடுமை இங்குதான் நடத்தப்பட்டது. எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் இராணுவமோ, காவல்துறையோ உள்ளே புகக் கூடாது. போர் விதிகளில் மிக முக்கியமானதாக இதை உலகெங்கும் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்தப் போர் விதியை இந்திய இராணுவம் அடியோடு மறியது. யாழ். நகரின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஆளானதால் ஆத்திரம் கொண்ட இந்திய இராணுவம் யாழ். மருத்துவமனையுள் வெறியுடன் புகுந்தது. அங்கிருந்த பலரைச் சுட்டுக் கொன்றது.

இந்தக் கொடிய நிகழ்ச்சியைப் பற்றி நேரில் விசாரிக்க நேரில் அங்கு சென்றேன். அங்குள்ள டாக்டர்கள் என்னை அன்போடு அழைத்துச் சென்று நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களை எனக்குக் காட்டினார்கள். இந்தியப் படை யாழ். போதனா மருத்துவமனைக்கு உள்ளே சுட்டுக் கொண்டே வந்தபோது மாடி அறை ஒன்றில இருந்த டாக்டாகள் இந்த ஒலி கேட்டுக் கழே இறங்கி வந்து கொணடிருந்தார்கள். "இது மருத்துவமனை, நாங்கள டாக்டாகள்'' என அவர் கள் அலறியதற்கு இந்தியப் படை செவிசாய்க்கவில்லை. மாடிப் படிகளிலேயே அவர்களைச் சுட்டுத் தள்ளினாாகள். மருத்துவமனையின் பல பகுதிகளில் கண்மூடித்தனமாகத துப்பாக்கியால் சுட்டாாகள். இதன் விளைவாக டாக்டர்கள், செவிலியாகள் 21 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் 109 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்த மருத்துவமனையில் 8,9 ஆகிய இரண்டு பிரிவுகள் முழுமையாகச் சேதம் அடைந்து விட்டன. படுகொலை செய்யப்பட்ட டாக்டர்

> **இந்தியப் படை யாழ்.போதனா மருத்துவ மனைக்கு உள்ளே சுட்டுக்கொண்டே வந்தபோது மாடி அறை ஒன்றில் இருந்த டாக்டர்கள் இந்த ஒலி கேட்டுக் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். "இது மருத்துவமனை நாங்கள் டாக்டர்கள்" என அவர்கள் அலறியதற்கு இந்தியப் படை செவி சாய்க்கவில்லை. மாடிப்படிகளிலேயே அவர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். மருத்துவமனையின் பல பகுதிகளில் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டார்கள். இதன் விளைவாக டாக்டர்கள் செவிலியர்கள் 21 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் 109பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.**

கள் மற்றும் செவிலியாகள் பெயாகள் எழுதப் பட்ட பலகை மருத்துவமனையின் முகப்பில் தொங்கவிடப்பட்டுள்ளது.

இது இந்திய இராணுவத்தின் கொடுமையை இன்றும பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த அதிர்ச்சியில் இருந்து அந்த மருத்துவமனை டாக்டர்களும்

**இணையப் பார்வை**

செவிலியர்களும் இன்னமும் மீளவில்லை என்பதையும் நேரில பார்த்தேன்.

## தம்பி வீட்டில் இந்தியப் படை

1985 ஆம் ஆண்டு, அக்டோபரில வல்வெட்டித்துறையில் உள்ள தம்பி பிரபாகரன் வட்டிற்கு நான் சென்று பார்த்த பொழுது வட்டின் கூரை மட்டுமே நாசமாகிக் கிடந்தது. சுவர்கள சேதமடையாமல் நின்றன. சிங்கள இராணுவம் அதற்கு மேல் நாசப்படுத்தவில்லை. ஆனால், ஐந்தாண்டுகளுக்குப் பின்பு 1990 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் அதே வட்டைச் சென்று பார்த்த பொழுது சுவாகள் எல்லாம் இடிக்கப்பட்டு அடியோடு நாசமாகிக் கிடந்தன. பிரபாகரனைப் பிடிக்க முடியாத இந்திய இராணுவம் பீரங்கியால் சுட்டு அவரின் வட்டை நாசப்படுத்தியது.

பிரபாகரனைச் சுடமுடியாத ஆத்திரத்தை அவரது வட்டைச் சுட்டுத் தீர்த்துக்கொண்டது. ஆனாலும், இந்தியப் படை வீரர்கள் தம் நாட்டிற்குத் திரும்பும் சமயத்தில் அணி, அணியாக அந்த வட்டிற்கு வந்து அதன் முன் நின்று ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். இந்த வினோதக் காட்சியை வல்வெட்டித் துறை மக்கள வேடிக்கையாகப் பார்த்து இரசித்தனர்.

(முற்றும்)

# இன்று ஒரு தகவல்

## காலம் போற்றும் கதிர்கள்

ஒரு சோதனைச் சாலைக்குள் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஒருநாளில் 20 மணிநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து ஆகாயத்தைப் பார்த்திருந்தார். மனைவி அவரிடம் போய் சாப்பிட வருமாறு அழைத்தார். அவர் காதில் அது விழவே இல்லை. 1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி அன்று மாலையில் அந்த ஆராய்ச்சி நிலையத்தில் அவர் மட்டும்தான் இருந்தார்.

உதவியாளர்களெல்லாம் வீட்டுக்குப் போய்விட்டார்கள. ஒரு வெற்றிடக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி இவர் ஏதோ செய்துகொண்டிருந்தார். அந்தக் கண்ணாடிக் குழாயில் கறுப்புத்தாளைச சுற்றியிருந்தார். வெளிச்சம் வெளியே வராமல் இருக்க அறையில் இருந்த விளக்குகளையும் அணைத்து விட்டார். இப்போது அந்த வெற்றிடக் குழாயினுள் மின்சாரத்தைச் செலுத்தினார். வெளிச்சத் தடுப்புக்காக சுற்றியிருந்த கறுப்புக் காகிதம் தானாக ஒளிவிட ஆரம்பித்தது.

போரியம், பிளாட்டினோ,சயனைற் என்ற இரசாயனம் தோய்க்கப் பட்ட காகிதம் அது. ஒளிக்கற்றையின் புலனாகாத கதிர்களைக் காட்டக் கூடியது அந்த இரசாயனம். கறுப்புக் காகிதத்தால் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக் கதிர்கள் வெளியே வருகின்றமை தெரிந்தது. உலகத்திற்கு ஒரு மகத்தான கண்டு பிடிப்புக் கிடைத்தது. அதுதான் எகஸ்ரே. கண்டுபிடித்த விஞ்ஞானி ராண்ட் ஜன்.

இவர் அந்தக் கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தார. பிளாட்டினம், ஈயம் தவிரமற்ற எல்லாப் பொருட்களையும் இந்தக் கதிர் ஊடுருவிச் செல்லக் கூடியது என்பதும் புரிந்தது. இந்தக் கதிரை தனது கையில் ஊடுருவச செய்து அதை ஒரு தகட்டில் பதிவுசெய்தார் கை எலும்புகள் துல்லியமாகத் தெரிந்தது. மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாகப் படம் எடுத்தார். மனைவியின் கை எலும்புகளுடன் திருமண மோதிரமும் அதில் தெரிந்தது.

மருத்துவ உலகிலும் தொழில்துறையிலும் இந்தக் கண்டு பிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆரமபத்தில் அவரை எல்லோரும் அலட்சியமாகத் தான் பார்த்தார்கள். எக்ஸ்ரே கண்டுபிடிப்பிற்குப் பின்புதான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் புரிந்துகொண்டார்கள்.

ஜெர்மனியின் பேரரசர் கெய்சர். அவரது முன்னிலையிலேயே ராண்ட்ஜன் எக்ஸ்ரேயை இயக்கிக் காட்டினார். அந்த மன்னருக்கு இடது தோளில் ஒரு கோளாறு. அதைப் படம்பிடித்துக் காட்டினார். கோளாறு என்னவென்பதும் புரிந்தது. சிகிச்சையும் சுலபமானது.

எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்த போது மக்களுக்கு ஒருபுறம் பயம், இன்னொருபுறம் வியப்பு. ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்டுபிடிப்பு இதுவென்று செய்திகள் பரவ ஆரம்பித்தன. அதனால் எல்லோரும வெளியே நடமாடவே பயந்தார்கள்.

இதனால் என்ன ஆனது தெரியுமா? சில துணி வியாபார நிறுவனங்கள் விளம்பரம் கொடுத்தன இப்படி. அதாவது "எங்கள் நிறுவனத்தின் உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி இவை உருவாக்கப் பட்டுள்ளன" என்று வதந்திகள் மக்களை மிகவும் குழப்பி விட்டது. அந்தக் காலத்திலெல்லாம இசை நாட்டிய நிகழ்ச்சிகள் அதிகம். இன்று சினிமா அதிகமானது போல.

இநத ஆபரா நிகழ்ச்சிகளுக்காகப் பெரிய அரங்குகளெல்லாம் உண்டு. கடைசி வரிசையில் இருப்பவர்கள தொலைநோக்கியை வைத்துப் பார்ப்பார்களாம். "ஆபராகிளாஸ்" என்றே அவற்றிற் குப் பெயர். எக்ஸ்ரே ஏற்படுத்திய வதந்தியால் நிகழ்ச்சி நடத்தும் கலைஞர்கள் கலவரப்பட்டுப் போய் விட்டார்களாம்.

அமெரிக்காவில் ஒரு மாகாணத்தில் விசித்திரமாக ஒரு சட்டம் போட்டார்களாம். இனி ஆபரா அரங்குகளில் எக்ஸ்ரே கதிர் உள்ள தொலைநோக்குக் கண்ணாடிகளைப் பயன்படுத் தத் தடை விதிக்கப்படுகிறது இதுதான் சட்டம். இப்படிப்பட்ட கண்ணாடி செய்வது சாத்தியமா என்று தெரியாமலேயே சட்டம் இயற்றினார்கள் என்பது ஆச்சரியமான விடயம் தான்.

அது இருக்கட்டும். இப்போது எக்ஸ்ரே எதற்கெல்லாம் உபயோகப்படுகிறது தெரியுமா? ஒரு இளைஞன் டாக்டரிடம போனான். "டாக்டர் நான் உங்களுடன் படித்த வெங்கடராமனுடைய மகன். என் அப்பாதான் உங்களிடம் அனுப்பினார். எனக்கு நெஞ்சுவலி" என்றான். "மிகவும் சந்தோஷம். உங்கள் தநதை எனது பால்ய சிநேகிதன் . சரி... நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா" என்றார்.

இவனும் போனான். எக்ஸ்ரே எடுத்துக்கொண்டான். மறு நாள் டாக்டரிடம் போனான். அவரும் பார்த்தார். அவருக்கு நினைவு வரவில்லை. பேசாமல் இருந்தார் "டாக்டர்! நான் நேற்று வந்தேன். நீங்கள் தானே எக்ஸ்ரே எடுத்துக்கொண்டு வரச் சொன்னீகள்." என்றான். "அப்படியா சொன்னேன் சரி படத்தைக் கொடு பார்க்கலாம்" என்று வாங்கினார். எக்ஸ்ரே படத்தை வாங்கி வெளிச்சத்தில் உற்றுப்பார்த்தார் எலும்புக்கூடு தெளிவாகத் தெரிந்தது. அதன்பின் தான் அவருக்கு ஞாபகம் வந்தது. " அடடே! நீ வெங்கட்ராமன் பிள்ளையா வாவா வந்து உட்கார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழ்.மாவட்ட பட்டதாரி பயிலுநர்கள் செயலகம் முன் மறியல் போராட்டம்





(படங்கள்:-எஸ்.ரி.ராஜா)

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பட்டதாரிப் பயிலுநர்கள் நேற்றுக் காலை 9.00 மணிமுதல் யாழ்.மாவட்ட செயலகத் திற்கு முன்பாக தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை தாக்கியவாறு மறியல் போராட்டம் ஒன்றினை நடத்தினார்கள்.

தமது பரீட்சைப் புள்ளிகள் தமக்கு தெரியப்படுத் தப்பட வேண்டுமெனவும் தமக்கு உடனடியாக நிரந் தர நியமனம் கிடைக்க வேண்டுமெனவும போரரட்டத் தில் ஈடுபட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் கோரிக்கை முன வைத்தனர்.

நூற்றுக்கணக்கான பட்டதாரிப் பயிலுநர்கள் இம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமது நியமனம் தொடர்பில் அடுத்த சில நாட்களில தமக்கு உரிய பதில் கிடைக்காவிடின் தமது போராட் டத்தினை மேலும் விரிவுபடுத்தி ஏ-9 பாதையினை மூடி மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக யாழ்.மாவட டப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

தமது பிரதிநிதிகள் நான்கு பேரினை திருகோண மலைக்கும் கொழும்புக்கும் அனுப்பி சம்பந்தப்பட்டவர் களுடன் பேசுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த பட்டதாரிப் பயிலுநர்களை யாழ்.மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் சந்தித்துக் கலந்து ரையாடினார்.

இதன்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி வெகு விரைவாக முடிவுகளைப் பெற்றுத்தருவதாக ஆர்பபாட் டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அவர் உறுதிமொழி வழங் கினார். (ந-122)

# முஸ்லிம் கவுன்ஸிலின் நிபந்தனைகளை ஏற்ற ரணில்; இன்று மஹிந்தவுடன் பேச்சு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் முன்வைத்த நிபந் தனைகளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொணடுள் ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் கவுன்ஸில் முன்வைத்த நிபந்தனை களை அவதானமாக ஆய்வு செய்த ரணில், தான் ஜனாதி பதியாகத் தேர்வானால் அவற்றைச் செயற்படுத்துவதாக உறுதியளித்துள்ளதாக கவுன்ஸிலின் பேசசாளர் தெரி வித்துள்ளார்.

இந்தக் கவுன்ஸிலில் இலங்கையின் முஸ்லிம் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எதிர்வரும் காலங் களில் நடாத்தப்படுகிற அமைதிப் பேச்சுக்களில் முஸ் லிம்கள் தனித்தரப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கையை முஸ்லிம் கவுன்ஸில் முதன் மைக் கோரிக்கையாக வைத்துள்ளது.

இடப்பெயர்வுக்குள்ளான முஸ்லிம்களுக்கு மீள மைப்பு நிவாரணம் பெறுதல், முஸ்லிம் தரப்பினரின் பாது காப்பை உறுதிப்படுத்தும் வகையில் யுத்த நிறுத்த ஒப்பந் தத்தில் திருத்தம், அரச நிறுவனங்களில் முஸ்லிம் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, பொலிஸ் உள் ளிட்ட பாதுகாப்புத் தரப்பில் முஸ்லிம்களுக்கான பிரதி நிதித்துவம், முஸ்லிம்களின் கல்வி மேம்பாடு உள்ளிட் டவைகளையும் முஸ்லிம் கவுன்ஸில் முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு முஸ்லிம் அமைசசரைப் பெற்றிருக்க வேண்டும்.முஸ்லிம்களின் கலாசாரம் மற்றும் உரிமைகளுக்காக காபினட் அந்தஸ்து உள்ள அமைச்சர் பொறுப்பு வழங்கவேண்டும் என்று மேலும் சில நிபந்தனை களையும் அந்தக் கவுன்ஸில் முன்வைத் துள்ளது.

இன்று இக் கோரிக்கைகள் தொடர்பாக சுதந்திரக் கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவையும் முஸ்லிம் கவுன்ஸில் சந்தித்துப் பேச உள்ளதாக கவுன்ஸிலன் பேச்சாளர் தெரிவித்தார். (ந-4)

# மஹிந்த-ஜே.வி.பி ஒப்பந்தத்தால் நாடு 35 ஆண்டுகள் பின்செல்லும்

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

தமது அரசாங்கம் 1994ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் அரசாங்கத்தை ஒப்படைத்த போது நாட்டின் தேசிய வருமானத்தின் 24 வீதம் வறிய மக்களுக்கு சென்றடைந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், கடந்த 11 வருடங்களில் இது 13 வீதமாகக் குறைந்துள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின காலத்திலேயே பல்கலைக்கழகம் ஒன்றின் கல்வி தனியார் மயமாக் கப்பட்டது என்றார்.

இதேவேளை, இந்நிகழ்வில் கலந்துகொணடு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல,

தனித்துப் போட்டியிட்டு நான்கு இலட்சம் வாக்கு களைக் கூடப் பெறமுடியாது என்ற அச்சத்திலேயே ஜே.வி.பி பிரதமமந்திரிக்கு ஆதரவு வழங்குகிறது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தம்மிடம தீர்வு இருப்பதாகத் தெரிவிக்கும் பிரதமர் மஹிந்த தமது சொந்த மாவட்டத்தின் அபிவிருத்தியைக் கூட உரியமுறையில் மேற்கெள்ளவில்லை எனக் குற்றம்சாட்டினார்.

இதேவேளை, இம் மாநாட்டில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பந்துல குணவர்த்தன,

உலகில் சமநிலைப் பொருளாதாரம் என்ற ஒன்று இல்லை எனத் தெரிவித்தார்.உலகின் திறந்த பொருளா தாரம், மூடிய பொருளாதாரம் என்பனவே இருக்கின் றன ஜே.வி.பியும்,பிரதமர் மஹிந்வும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் எட்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேசியப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் முகமாகவும் வெளிநாட்டுப் பொருளாதாரத்துக்கு ஈடுகொ டுக்கும் வகையிலான சமநிலைப் பொருளாதாரம் என்பதை தான் அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் துரதிஷ்டவசமாக அவ்வாறானதொரு பொருளாதாரம் நடைமுறைப்படுத்தப்பட்டால்அது நாட்டை மீண்டும் 1970 ஆம் ஆண்டுக்காலப் பகுதிக்கே கொண்டு செல்லும்.

சுமார் 60 இலட்சம் பேர் வரையில் தங்கியிருக்கும் தனி யார் துறையினை அழிக்கவேண்டும் என்ற நோக்கில் செயற்படும் ஜே.வி.பி. அதனை சாதிக்க முடியாமல் நாட்டை மேலும் வீழ்ச்சி நிலைக்கே இட்டுச் செல்கின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தினார். (ந-4)

### பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்களுக்கு

# சிபார்சு செய்யப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கு அமைச்சு இணக்கம்

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரி களுககு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிபார்சு செய்யப் பட்ட சம்பளத் தொகையை வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள் ளதாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

பொதுநிர்வாக அமைச்சு இவ்வாறான ஒரு நடவடிக்கை மேற்கொண்டுள்ள போதிலும் அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேறகொள்ளாமையே சிக்கல்நிலை தோன்றுவதற்கான முக்கிய காரணம் என்று பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தங்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு பொது நிர்வாக அமைச்சு அனுமதி அளித்துள்ளபோதிலும் திஸ்ஸ தெய்வேந்திர சம்பள நிர்ணயக் குழுவின் சிபார்சு கிடைககும் வரை காத்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்தச் சங்கத்தின பிரதான செயலாளர் மகிந்த லியனகே தெரிவித்துள்ளார்.(ந-7)

# அன்புள்ள அம்மா!

4

ஸ்கான் செய்வதின் பிரயோசனங்கள் பல

1. திகதியை சரியாகக் கணிப்பிடுதல்.
2. குழந்தையின் உடலமைப்பு. வளர்ச்சி என்பன சரியாக உள்ளதா என அறிதல்.
3. சூல் வித்தகம் நஞ்சுக்கொடி (Pla centa) சரியான இடத்தில் அமைந்துள்ளதா என அறிதல்.
4. குழந்தையின் நிலை (Position)யை அறிதல்.



**ஆண்குழந்தையா பெண்குழந்தையா?**

ஸ்கான் செய்யும்போது பெரும்பாலான தாய்மார் கேட்கும் கேள்வி என்ன குழந்தை?

கிட்டதட்ட 6 மாதங்களின் பின்னர் குழந்தையினைப் பெரும்பாலும் அடையாளங்காண முடியும். இது 90 சதவீதம் சரியாக இருக்கும். எனினும். குழந்தையை யார் என்று அறியும் நோக்கில் ஸ்கான் செய்யப்படுவதில்லை.

தாயின் வயிற்றின் அமைப்பு, கோடுகள், வாந தி. தங்கும் நாட்கள் என்பனவற்றைக் கொண்டு குழந்தையை ஆணா பெண்ணா என தீர்மானிப்பது உண்மையானதல்ல.

### கர்ப்பகாலத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

வளரும் குழந்தைக்கு தக்க சூழலை கொடுப்பதற்காக தாயின் உடலில் முக்கிய மாற்றங்கள் நிகழ்கின்றன. இதேபோல். தாயின் உளநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**முதல் 3 மாதங்கள்**

இது மிகவும் முக்கியமான காலகட்டமாகும். குழந்தையின் பெரும்பாலான அவயவங்கள் 3 மாதங்களுக்குள் தோன்றிவிடும். எனவே இக்காலத்தில் தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகள் குழந்தை உருவாதலில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். இதன் காரணமாகவே முதல் 3 மாதங்களிலும் தேவையற்ற மருந்துகளை தவிர்க்க வேண்டும்.

பெரும்பாலான கருச்சிதைவுகள் (Miscarriage) இக்காலத்திலேயே நிகழ்கின்றன. ஒரு கரு. 3மாதங்களிற்குள் பிரச்சினை எதிலும் இருந்து தப்பினால் அது ஒரு முழுக்குழந்தையாக 95% சாத்தியம் இருப்பதாகக் கூறுவர். இதனாலேயே தாய்மார்கள் தாம் கர்ப்பமுற்ற செய்தியை 3 மாதங்கள் வரை வெளியே சொல்ல விரும்புவதில்லை.

முதல் 3 மாதங்களே தாய்க்கு மிக அசௌகரிகமான காலமாகும். முக்கியமாக வாந்தி, உடல் களைப்படைதல், தலைச்சுற்று என்பள இக்காலத்திலேயே ஏற்படுகிறது. இக்காலகட்டத்திலே தாய் உணவை தவிர்ப்பதால் சிலருக்கு உடல் மெலிவு கூட ஏற்படும். உடலில் ஏற்படும் ஹோர்மோன்களே இந்தப் பிரச்சினைக்குக் காரணமாகும்.

•உடலில் ஏற்படும் மாற்றங்களால் அசாதாரணமான களைப்பும் மனச்சோர்வும், தலைச்சுற்றும் ஏற்படும். உங்கள் மனம் கர்ப்பமுற்றிருக்கும் சந்தோஷமான விடயத்தை சில நேரங்களில் மறந்து இனம்புரியாத கவலைகள் ஆட்கொள்ளும். இவையெல்லாம் அந்த ஹோர்மன்களின் வேலையே. உங்கள் கவலைகளையும் சந்தோஷங்களையும் கணவருடனோ அல்லது உங்கள் நெருங்கிய உறவினருடனோ பகிருங்கள்.

### ஆரம்பகால கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள்

1) குருதிப்போக்கு (Early Pregnancy Bleeding) இப்பிரச்சினை ஐந்தில் ஒரு கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படுகிறது. இதற்கான காரணங்கள் வருமாறு.

1. கருச்சிதைவு (Miscarriage)
2. பலோப்பியன் குழாயில் கரு (Ectopic)
3. கர்ப்பப்பை நோய்கள்

பலருக்கு கர்ப்பகாலத்தில் குருதிப்போக்கு இருப்பினும் சிலருக்கே கர்ப்பத்தில் பிரச்சினைகள ஏற்படுகிறது. ஏனையோருக்கு கரு சாதாரணமாக வளரும் சாத்தியம் உள்ளது.

எனவே. குருதிப்போக்கு உள்ள பெண்கள் உடனடியாக வைத்தியரை நாடி பரிசோதனைகளும். ஸ்கான் பரிசோதனையும் செய்தல் அவசியம்.

2) கருச்சிதைவு (Miscarriage,Abortion)

கர்ப்பமுற்றிருக்கும் தாய்மார்கள் தங்கள் கருவிற்கு ஏதாவது ஆபத்து அல்லது கருச்சிதைவு ஏற்பட்டு விடும் என்ற பயம் நிலவுவது சகஜம். அன்றாட வாழ்வில் ஏற்படும் சாதாரண நிகழ்வுகளால் கருச்சிதைவு ஏற்படுவதில்லை.

பிரயாணங்கள் செய்வதாலோ அல்லது பழங்கள் (உதாரணமாக அன்னாசி. பப்பாளி) உட்கொள்வதாலோ கருச்சிதைவு ஏற்படுவதில்லை.

**ஏன் கருச்சிதைவு ஏற்படுகிறது?**

ஐந்து கர்ப்பங்களில் ஒரு கர்ப்பம் முழுமை பெறாமல் கருச்சிதைவடைகிறது. இதற்கு வெளிப்படையாகக் காரணங்கள் பெரும்பாலும் தெரிவதில்லை. ஆனால் கருவுற்ற குழந்தையின் உடலமைப்பு அல்லது நிறமூர்த்தங்களில் பாதிப்பு இருப்பின் இயற்கையாகவே இக்கரு சிதைவடையும். இதன்மூலம் இயற்கை தேகாரோக்கியம் உள்ள குழந்தைகளை தேர்வு செய்கிறது எனலாம்.

**கருச்சிதைவுக்கான முக்கிய காரணிகள**

1. குறைபாடுள்ள கரு
2. பலவீனமான கருப்பைக்கழுத்து
3. தாய்க்கு ஏங்படும் தொற்று நோய்கள்
4. தாயின் ஏனைய நோய்கள் (சலரோகம். சிறுநீரக நோய்கள்)

**கருச்சிதைவின் அறிகுறிகள் என்ன?**

குருதிப்போக்கு. வயிற்று நோ என்பன கருச்சிதைவின் ஆரம்ப அறிகுறிகள் ஆகும். எனவே உடன் வைத்திய ஆலோசனையை நாடவேண்டும்.

கருச்சிதைவைத் தடுக்க முடியாதுவிடினும ஏனைய தொடரும் சிக்கல்களை (உ-ம் குருதிப்போக்கு. நோய்த்தொற்று) தவிர்க்க முடியும்.

**அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுவது ஏன்?**

இதற்கு பல காரணங்கள் உள்ளது. இதற்கு



நிபுணத்துவ ஆலோசனையைப் பெறுதல் அவசியமாகும். தூரப்பயணம் செய்வது கருச்சிதைவை ஏற்படுத்தும் என்பது தவறான கருத்தாகும்.

**கருப்ன்பக்கு வெளியே கருத்தங்குதல (Ectopic Pregnancy)**

சாதாரணமாக கருக்கட்டிய முட்டை கருப்பையில் 4ஆம் நாள் பதிவுறும். இவ்வாறு நிகழாவிடின். கரு. பலோப்பியன் குழாயில் (அதாவது கருப்பைக்கு வெளியே) தங்கக்கூடும். கருவின் வளர்ச்சிக்கேற்ப பலோப்பியன் குழாய் விரிவடைய இயலாமல் வெடிக்கும் நிலை ஏற்படும். இதனால் பெருமளவு குருதிப்போக்கு ஏற்படும்.

**வைத்திய கலாநிதி சி.நவநீதன்**

(தொடரும்)

---

## இராசி பலன்

**15.09.2005**
**(ஆவணி 30, வியாழக்கிழமை)**
**துவாதி பிற்பகல் 3.25 மணிவரை**
**திருவோணம் பிற்பகல் 5.13மணிவரை**
**இராகுகாலம்1.33-3.03 மணிவரை**
**சுபநேரம்7.33-9.03 மணிவரை**
**பிரதோச விரதம்**

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், தூரதேசச்செய்தி, காரிய நன்மை, பிறர்உதவி. |
| இடபம் | அதிக பிரயாசை, கட்டுப்பாடு, பிரயாணம் பிதாசிந்தை. |
| மிதுனம் | எதிப்பாராத பிரச்சினை, காரியதாமதம், பிறருக்கு உதவுதல், தனவிரயம் |
| கடகம் | தெய்வசிந்தை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | சுவாரஸ்யம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசனசுகம், பகைவரால் நன்மை. |
| கன்னி | சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம், பண விரயம், உறவினர் சந்திப்பு. |
| துலாம் | மனச்சஞ்சலம், எடுத்தகாரியம் தாமதமாகும், வேலையில் ஆர்வம், சுபசெலவு. |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, முயற்சிகை கூடும், பிரயாண நன்மை, பொருள்சேர்க்கை. |
| தனுசு | உணர்ச்சி வசப்படுதல், காரியதாமதம், பணவிரயம், குடும்பக் கவலை. |
| மகரம் | சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, முயற்சி தாமதம், தொழில் நன்மை. |
| கும்பம் | இடமாற்றம், சுபசெலவு, முயற்சி தாமதம், வேலைச்சுமை. |
| மீனம் | எதிர்பாராத நன்மை, நண்பரால் உதவி, காரிய சித்தி, கீர்த்தி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

---

## தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிக்க முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

முக்கிய சிறுபான்மையினக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழு ஆதரவையும் வழங்குவது எனத் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை இம் முக்கிய முடிவு அக்கட்சியால் எடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்படுவதாவது, சிறுபான்மையினத்தவருடன் நட்புறவான ஒருவரான ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர ஆதரவு வழங்குவதற்கு வேறு தெரிவுகள் எம்மிடம் இல்லை.

மேலும ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் இனவாத அணுகுமுறையையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்றமடைந்துள்ளது. எனவே, எமது தேவைகளை ராஜபக்ஷவிடம் கூறுவதற்கு நாம் விரும்பவில்லை. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு,அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸ் பலமானதொன்றாக விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

## வடமராட்சியில் இருநாள் கலை இலக்கியப் பெருவிழா

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழா நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் பி.ப.2.30 மணிக்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று பி.ப.2.30 மணிக்கு கிருஷ்ணாழ்வார் அரங்கில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம், கே.கஜேந்திரகுமார் ஆகியோரும கௌரவ விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.அம்பலவாணரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவர்களின் தமிழ் இன்னியம் இசைத்தலுடன் நிகழ்வும் ஆரம்பமாகி தொடர்ந்து பிரதேச கலாசாரக் கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, மங்கள இசை என்பன இடம்பெறும்.

வரவேற்புரையை திருமதி கவிதா தவேஸ்வரனும் தலைமையுரையை சி.சத்தியசீலனும் நிகழ்த்துவர். தொடர்ந்து வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளின் "தமிழின் அழகு" எனும் குழுநடனமும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களின் குழுப் பாடலும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலாசாரப்பேரவை உறுப்பினா ஆ.இரகுநாதனின் அரங்குபற்றிய அறிமுகவுரையும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிநிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸின் சிறப்புரையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளின் 'தில்லானா'வும் கவியரங்கமும், அல்வாய் மனோகரகான நாடக சபாவின் 'பூதத்தம்பி' இசை நாடகமும் இடம்பெறும். (ற-101)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுகூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல உள்ளூர் திணைக்களத் தலைவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ற-35)

## தியாகி லெப் கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினம்



### தீரம் மிக்க உத்தமனே!

ஈழ வானின் விடிவிளக்கே
ஈழ மண்ணின் ஒளி விளக்கே!
இந்தியாவின் வஞ்சகத்தால்
இளந்தளிரே உயிர் பிரிந்தாய்!
தலைவனது தம்பியாகி
தரணியிலே நடைபயின்றாய்
தீரம் மிக்க உத்தமனாய்
திலீபன் என்னும் நாமம் கொண்டாய்!
நல்லை நகர் வீதியிலே
பன்னிரு நாள் வேள்வி செய்து
நம்பி வந்த மக்கள் அழ
நானிலத்தை நீ பிரிந்தாய்!
பார்த்தனக்குப் பாடம் சொன்ன
பாரதத்தின் திரை விலக்கி
பரணியெங்கும் முரசறைந்து
பாரதத்தின் கொடுமை சொன்னாய்
எப்படியும் வாழ்வோமென்ற
எளியவர்கள் திரை விலக்கி
இப்படித்தான் வாழ்வோமென்ற
இனியதொரு கவிதை தந்தாய்!

அராலியூர் எஸ்.எஸ்.ரூபன்

# அதிகரிக்கும் வன்செயல்களுக்கு இராணுவமும் பெரும்பான்மை இனகாடையர்களுமே பொறுப்பு

## தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு எதிரான சிங்களப் படையின் அட்டூழியங்கள் அதிகரித்து வருவதாக திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை குற்றம்சாட்டியுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையினர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரத்தில் மே மாதம் 15ஆம் திகதி நள்ளிரவில் சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றக்கோரி தமிழ் மக்கள் தொடர்ந்து நடத்திய போராட்டத்தினால் திருகோணமலை மாவட்டம் இயல்பு வாழ்க்கை சீருலைந்தது.

அந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அமைச்சர்கள் நிலையிலான குழுவினரை மூன்றுமுறை திருகோணமலைக்கு அனுப்பினார்.

அக்குழுவினருடனான பேச்சுவார்த்தையின் போது சட்டரீதியான நடவடிக்கை மூலம் உடனடியாக புத்தர் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்திய திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரால் சட்டவிரோத புத்தர் சிலையை அகற்றுவதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை எதுவுமே நடைபெறவில்லை. சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக் கூட திரும்பப் பெறப்பட்டுள்ளது.

அரசாங்கம் மௌனமாக இருந்து கொண்டு இராணுவத்தினரை தமிழ்பேசும் மக்களுக்கெதிராக வன்முறையில் செயற்படுவதற்கு அனுமதித்துள்ளது.

புத்தர்சிலை விவகாரத்தை அடுத்து திருகோணமலை நகரத்தில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட இராணுவத்தினர் இன்று தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்வு நிலையினை சீர்குலைத்துள்ளதுடன் தமிழ் பேசும் மக்களை உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்துகின்ற மோசமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

தேடுதல் என்ற போர்வையில் மனித உரிமை மீறல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

நள்ளிரவில் பத்து மணிக்குப் பின்னர் செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் போன்ற கிராமங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதும் அநாமதேய இராணுவத்தாரிகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ள நிலையில் பாடசாலைகள், கோவில்கள் யாவற்றுக்கும் பக்கத்தில் விரும்பியவாறெல்லாம் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நகரத்தில் நடைபெறும் குண்டு வெடிப்புக்களுக்கு பின்னணியில் பெரும்பான்மையின காடையர்களும் படையினருமே இருக்கின்றன எனக் குற்றஞ்சாட்டுகின்றோம்.

காவலரண்களும் வீட்டுக்கு வீடு இராணுவமும் நிற்கின்றபோது அதற்கிடையில் வந்து வேறெவருமே குண்டு வீசிச் செல்லமுடியாது. தமது இருப்பினை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இராணுவத்தினர் செய்யும் திட்டமிட்ட விசமச்செயல்களே இக்குண்டு வெடிப்புக்களாகும்.

அவசரகால நிலையின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் முற்று முழுதாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

சிறிமாபுர பிரதேசத்தில் இராணுவமும் பொலிஸாரும் துணைபுரிய பெரும்பான்மையின வன்முறையாளர்கள் தமிழ, முஸ்லிம் மக்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திய வண்ணம் உள்ளனர்.

1977ஆம் ஆண்டு முதல் இராணுவம் எதைச் செய்கிறதோ அதையே இன்றும் திருகோணமலையில் செய்து கொண்டிருக்கின்றது.

இந்த மதகுரு ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

பத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் றாகம பிரதேசத்தில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## படையினர் புகார்

மூதூர் வெருகல் ஆற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிதாக பதுங்கு குழிகளை அமைத்து வருவதாக கண்காணிப்புக் குழுவிடம் இராணுவம் முறையீடு செய்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி முதல் சுமார் 30 விடுதலைப்புலிகள் மெழுகுச் சீலையினால் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொண்டு பதுங்கு குழிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அந்த முறையீட்டில் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் புதிதாக பதுங்கு குழிகளை அமைப்பது யுத்த நிறுத்த மீறல் என்று தெரிவித்து இந்த முறையீடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

## கருத்தரங்கு

(துன்னாலை)

வடமராட்சி நெல்லியடி பிரதேச நேதீக் கடைகள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான சுகாதார வழிமுறைகள் கருத்தரங்கு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

நெல்லியடி பொதுச் சுகாதார பிரிவு பரிசோதகர் பி.பாலதேவா தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொதுச சுகாதாரப் பரிசோதகர் எம்.ரவிச்சந்திரன் கலந்துகொண்டு உணவகங்களில் கையாளப்படும் சுகாதார வழிமுறைகள் பற்றி விரிவாக கருத்துரை வழங்கினார்.

இதனால் உணவகங்களில் பணியாற்றும் புதிய ஊழியர்கள் பெரிதும் பயனடைந்தனர். (த-101)

# தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வலயக் கல்வி அதிகாரிகள் விசனம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள கல்வி அலுவலகங்களுக்கு வரும் உத்தியோக பூர்வமான கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் அமைந்திருப்பதாக அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து யாழ்.மாவட்டத்தின் கல்வி வலயங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களே இவ்வாறு சிங்கள மொழியில் அமைந்திருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தனிச் சிங்கள மொழியில் வரும் கடிதங்களில் வரும் முக்கிய விடயங்களை மொழிப்பிரச்சினை காரணமாக காலந் தாழ்த்தியே விளங்கிக்கொள்ள வேண்டியிருப்பதாகவும் இதனால் முக்கிய விடயங்கள் பலவற்றை குறித்த திகதிகளில் செய்து முடிக்க முடியாது இருப்பதாகவும் விசனம் வெளியிடப்படுகின்றது.

சமீபகாலமாக யாழ்.கல்வி வலயங்களுக்குக் கிடைக்கும் உத்தியோக பூர்வமான கடிதங்கள் சிங்கள மொழியிலேயே வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ரூ.2 கோடியே 30 இலட்சம் செலவில் யாழில் 30 வீதிகளுக்கு மின் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் அயரா முயற்சியினால் 2005ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தின் 30 வீதிகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்க நிக்கொட் ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ் வீதிகளுக்கான மின் இணைப்பு வேலைகளை இந்த வருடத்துக்குள் முடிக்குமாறும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி யாழ். மாவட்ட மின்சார சபை அதிகாரிகளைக் கோரியுள்ளார். ஏறத்தாழ இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபா இம்மின் இணைப்புகளுக்காக செலவிடப்படவுள்ளது.

இதற்கமைய வலிகாமம் கிழக்கில் சுழாவடி வீதி - சிறுப்பிட்டி, வேம்பாம் - அச்செழு, ஆனந்தபுரம் - கட்டப்பிராய், வசந்தபுரம் - கட்டப்பிராய், யோகபுரம் - உரும்பிராய், கொலனி வீதி - அச்செழு, அறிவெளி வீதி - புத்தூர் கிழக்கு, வீரமனை வீதி - வீரமனை, சிந்தூசிட்டி வீதி - புத்தூர் மேற்கு, மடத்தடி வீதி,- இருபாலை கிழக்கு, நெசவு நிலைய வீதி - வளலாய்.

அம்மன் கோவில் வீதி - கோப்பாய் மத்தி

வலிகாமம் வடக்கில்,

பாடசாலைவீதி - குட்டியபுலத்திலும் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் தென்மராட்சியில்,

பாடசாலை வீதி - கரம்பைக்குறிச்சி, அம்மாகடை வீதி - வரணி, நாகநாதன் வீதி, அம்மன் கோவில் வீதி - தவசிகுளம், ராஜா வீதி - வரணி இயற்றாலை, கலைவாணி சனசமூக நிலைய வீதி - வரணி இயற்றாலை, காட்டு கந்தசாமி கோவில் வீதி - வரணி இயற்றாலை, வேலாயுதர் கோவில வீதி -கரம்பைக்குறிச்சி கிழக்கு, ஊரியான் வீதி - கைதடி, கட்டைப்பன் சந்தி - வரணி இயற்றாலை, கேணியடி வீதி - சாவகச்சேரி, பீச் றோட் கைதடி தெற்கு

வடமராட்சி வடக்கில்

நீர்வளை பிள்ளையார் கோவில் வீதி - அல்வாய் மேற்கு, மரவடி மத்தி வீதி வல்வெட்டித்துறை. பானம்பட்டி நாவலடி வீதி - அல்வாய் வடக்கு, மாயக்கை வீதி - அல்வாய் கிழக்கு

தீவகத்தில்

எழுவை தீவு, அனலைதீவு.

வலிகாமம் தென்மேற்கில்

கெலன்சம் குள வாய்க்கால் வீதி சங்குவேலி தெற்கு ஆகியவற்றில் இவ் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மாபெரும் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினரின் அனுசரணையுடன் இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க வேலணைப்பிரிவு மற்றும் புங்குடுதீவு அலகு ஆகியவற்றின் உதவியுடன் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை புங்குடுதீவு மகா வித்தியாலத்தில் மாபெரும் மருத்துவ முகாமொன்று சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்பல்கலைகழக மருத்துவ அதிகாரி திருமதி ஜெ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் வைத்திய கலாநிதிகளும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி வருட மாணவர்களும் இவ் வைத்திய சேவையை வழங்கவுள்ளனர்.

வைத்திய வசதி குறைந்த புங்குடுதீவு மக்கள் வைத்திய வசதி, வைத்திய ஆலோசனை ஆகியவற்றைப் பெற்று பயனடையுமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

மேலும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் சார்பில் புங்குடுதீவு சர்வோதயவளாகத்தில் 50 தொண்டர்களுக்கு முதலுதவிப்பயிற்சியின் இரண்டாவது அமர்வு ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்மாகும் எனச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (ற)

# மாணவர்களைத் தாக்கிய ஆசிரியர்கள் மூவருக்கு தலா இரு வருடச் சிறை

(கொழும்பு)

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் மாணவர் ஒருவனை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட அக் கல்லூரியின் ஆசிரியர்கள் மூவர்களுக்கு கொழும்புமேல் நீதிமன்றம் இரண்டு வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2001ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி மாணவனை அதே கல்லூரியின ஆசிரியர்கள் மூவர்கள் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்தாக அவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

இது மீதான விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ரி.ரத்தின நாயக்கா முன்னிலையில நடைபெற்றது.

இதன்போது, சித்திரவதை செய்து தாக்கப்பட்ட மாணவனின் வைத்திய அறிக்கையைப்பரிசீலித்த பின்னர் மூன்று ஆசிரியர்களும் குற்றவாளிகள் என இனங்கண்டு இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது . (ற-8)

# ஊழல்கள் மலிந்துள்ள அரச திணைக்களங்கள்

(கொழும்பு)

அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் பெருமளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக இலஞ்ச ஊழல மோசடி தடுப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேனரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு சிறு பணத்தைச் செலுத்தாமல் எந்த வொரு தேவையையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத அளவிற்கு அரச நிறுவனங்களின் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பணம், பொருள் மற்றுமன்றி உடல் ரீதியாக அல்லது மனரீதியாக திருப்தியைப் பெற்றுக் கொள்வதும் இலஞ்சமாக கணிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலஞ்ச ஊழல் மோசடியை எதிர்ப்போம்" என்ற தலைப்பில் இரத்தினபுரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. (ற-7)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் நாளை காலை 10.00 மணிக்கு 'வாழ்வகம்' மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ற-35)

# 6 பதில் அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் சென்றுள்ளதால் ஆறு அமைச்சர்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ண சிறி விக்கிரமநாயக்கவும், பாடசாலைக் கல்விகள் அமைச்சராக மங்கள சமரவீரவும் உயர்கல்வியமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும், தகவல் ஊடக அமைச்சராக டிலான் பெரேராவும், நிவாரண புனரமைப்பு அமைச்சராக டி.எம்.தஸநாயக்கவும் போக்குவரத்து அமைச்சராக லசந்த அழகியவன்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-4)

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு -குறள்

வலம்புரி

## தேசிய அரசை அமைக்க பிரதான கட்சிகள் முயலுமா?

**1978 களில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு இந்த நாட்டையே குட்டிச்சுவராக்கி விட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை தன்னலம் கருதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா கொண்டுவந்திருந்தார்.**

**ஐக்கிய தேசியக்கட்சியின் எந்த உறுப்பினர்கள் மீதும் நம்பிக்கையில்லாத ஜே.ஆர்.ஜெவர்த்தனா தனது ஆட்சிக்காலத்தின்போது தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டார்.**

**தனது அரசமைப்பில்-ஆட்சியில் இம்மியும் நம்பிக்கையில்லாத ஜே.ஆர்.தனக்காகக் கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையால் இலங்கையின் அரசியல் புலம் சிதைவுற்றுப் போயுள்ளது.**

**இரண்டு தடைவைகள் ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிக்க பெரும் பிரயத்தனம் எடுத்தார்.**

**தன்னுடன் அந்தப் பதவிக்கு முடிபுகட்ட வேண்டுமென்பது அவரின் திட்டம். எனினும் அவரின் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி உதவ மறுத்துவிட்டது.**

**ஜனாதிபதி ஆட்சிமுறை நாட்டிற்குப் பொருத்த மற்றதென்பதை ஐக்கியதேசியக்கட்சி உணர்ந்திருந்தாலும், சர்வவல்லமை பொருந்திய அந்தப் பதவியில் நானும் ஒருதடைவை இருந்து விட்டு அதன் பின்னர் அப்பதவியே இல்லாதொழிக்கலாமே என ரணில் விக்கிரமசிங்க நினைத்துக் கொண்டார்.**

**அவரின் நினைப்பு அன்று சரியாக இருந்தாலும் இன்று அது தவறான முடிபு என்பதை உணர்த்தி நிற்கின்றது.**

**ஆம், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளராக அநுராபண்டார நாயக்காவே நிறுத்தப்படுவார் என்பது ரணிலின் முடிபு. அவ்வாறு அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் வெற்றி தனக்கே என ரணில் ஊகித்துக்கொண்டார்.**

**ஆனால் நிலைமை தலைகீழாக மாறியது. எதிர்பார்க்கப்பட்டது போல ஜனாதிபதி வேட்பாளராக அநுரா நிறுத்தப்படவில்லை. மாறாக பிரத ர் மகிந்த ராஜபக்ஷவே சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக முன்மொழியப்பட்டார்.**

**ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவோ ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயபோன்ற இனவாதக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தேர்தல்களத்தில் குதித்துள்ளார்.**

**இந்நிலையில் ரணிலின் எதிர்காலம் பாதகமாகவே இருக்குமென்பது அரசியல் அவதானிகளின் எதிர்பார்ப்பு.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டபோது ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் இப்படியொரு கேடு வந்திருக்காதென ரணில் விக்கிரமசிங்க தற்போது நினைத்துக்கொள்ளலாம்.**

**இவை காலம் கடந்த ஞானமாயினும் இன்னமும் ஓர் சந்தர்ப்பம் உண்டு. அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் சேர்ந்து தேசிய அரசை அமைப்பதாகும்.**

**இதிலும் உடன்பாடு எட்டப்படாவிட்டால் இலங்கை அரசியலின் எதிர்காலம் மிகமோசமானதாக அமைவதை எவராலும் தடுக்கவும் தவிர்கவும் முடியாது போகும்.**

# மீண்டும் அரச தரப்பில் அமர ஜே.வி.பி. தீவிர ஆலோசனை

(கொழும்பு)

எதிர்வரும் 20திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடும் போது ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை மீண்டும் அரச தரப்பு இருக்கைகளில் அமருவது குறித்து ஆலோசித்து வருவதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதித்தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்ட நிலையில் ஜே.வி.பி யின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென சில அமைச்சர்கள் ஜே.வி.பி யின் பாராளுமன்ற குழுத்தலைவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி க்குமிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையிலும் மஹிந்தவின் செல்வாகை அதிகரிக்கும் நோக்கிலும் அரச தரப்பில் அமர்ந்திருப்பதற்காக ஜே.வி.பி யின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் இது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர் இது குறித்து ஜே.வி.பி. சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அதுபற்றி பேசவுள்ளதாகவும் தெரிய வருகின்றது . (ந)

# மஹிந்தவுடனான பிரசாரத்திலிருந்து அமைச்சர் அநுரா திடீர் பின்வாங்கல்

(கொழும்பு)

ஆளும்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன்இணைந்து பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக நியமிக்கப்பட்டவரும்பிரதமர் பதவி வேட்பாளருமான அநுரா பணடார நாயக்க பிரதமருடன் இணைந்து பிரசாரம் செய்வதிலிருந்து உடனடியாகப் பின்வாங்கியுள்ளார்

இது குறித்து அநுரா பண்டாரநாயக்க குறிப்பிடுகையில் ஜே.வி.பியுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் தேர்தல் ஒழுங்குகளை பிரதமர் செயவதால் தான ஏமாற்றமடைந்ததாகத் தெரிவித்தார்

மூன்று வாரங்களுக்கு முன்னரே கட்சித்தலைவரும், சகோதரியமான சந்திரிகாவினால் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளர் என நியமிக்கப்பட்டார் .

கொழும்பு ஊடக மொன்றுக்கு அமெரிக்காவுக்கு புறப்படமுன்னர் அளித்த செவ்வியில் தான் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் பங்கெடுக்க விருப்பவில்லை என்றும் பிரதமா ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை மீறி ஜே.வி.பி ஹெல உறுமயவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதனால் கடந்த சில நாட்களாக பிரதமரின் நடவடிக்கைகள ஏமாற்றம் அளிப்பதால் தான் பரசாரத்தில் பங்கெடுக்க விரும்பவில்லை எனவும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்

இதிலிருந்து உத்தியோக பூர்வமாக விலகிக்கொள்வதாக ஒரு பக்கக்கடிதம் எழுதி ஜனாதிபதியிடம் அவர் கையளித்துள்ளார்

மஹிந்த போன்றவர்களுக்கு ஆதரவளிக்கும் நிலையில் தான இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிப்பதாக அக்கடிதத்தில் அநுரா குறிப்பிட்டுள்ளார்

அநுரா பண்டாரநாயக்கவின் பின் வாங்கலானது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவினை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. (ந-4,6)

## எழுத்துப் பரீட்சை நாள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று வியாழக்கிழமை மு.ப 9.30 மு.ப 11.00 ஆகிய நேரங்களில் நடைபெற இருந்த புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்பெறமாட்டாது.

இப்பரீட்சை எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறுமென மோட்டார்போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ந)

## விளக்கமறியல் பொலிஸாரை சந்திக்க 27வரை க.கா குழுவுக்கு அனுமதி மறுப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 27ஆம் திகதிவரை தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட பொலிஸார் மூவரையும் சந்திப்பதற்கு இது வரை தமக்கு அனுமதி கிடைக்கவில்லையென யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று சந்திப்பதற்கு அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை அதற்குரிய வாய்ப்புகள் கிடைக்காது என தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலகஸ்தொத்தீர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அனுமதியின்றி மன்னார் நிர்வாகப் பிரதேசத்தில் நுழைந்த மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை தமிழீழ நீதிமன்றினால விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.இது ஒரு யுத்தநிறுத்த மீறலாகும்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் சந்திக்க அனுமதிக்க வேண்டுமென்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வேண்டுகோள் விடுத்தது.இதனையேற்று மூவரையும் சந்திக்க யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அனுமதியளித்துள்ளனர்.இருந்தும் இச் சந்திப்பு எதிர்வரும் 27ஆம்திகதிக்குப் பின்னரே சாத்தியமென அவர் தெரிவித்தார். (இ-4)

## பூப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வர்த்தகவங்கி யாழ்ப்பாணம் நெல்லியடி கிளைகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பூப்பந்தாட்டசங்கம் நடாத்தும் கனிஷ்ட, தேசிய பூப்பந்தாட்ட மாவட்ட மட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு 11,13 வயது ப்பிரிவு பெண்களுக்கும் மாலை 3மணிக்கு 11,13 வயது ப்பிரிவு ஆண்களுக்கும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு 15,17,19,வயதுப பிரிவுப்பெண்களுக்கும் மாலை 3மணிக்கு 15,17,19,வயது பிரிவு ஆண்களுக்கும் போட்டிகள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ந)

## நோர்வே பாராளுமன்றத் தேர்தலில் எரிக் சொல்ஹெய்ம் கூட்டணி வெற்றி

(நோர்வே)

நோர்வே பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற இடதுசாரிகள் ஆட்சி அமைக்கவுள்ளனர். தொழிலாளர் கட்சி தலைமையிலான மூன்று கட்சிகள் அடங்கிய இடதுசாரிகள் றெட்கிறீன் பெரும்பான்மை ஆசனங்களை வென்றுள்ளனர் றெட்கிறீன் ஏன்றழைக்கப்படும் இக்கூட்டணியில் நோர்வேயின விசேட தூதுவராக இலங்கையின் சமாதானப் பேச்சில் பாரிய பங்களிப்பு செய்து வரும் எரிக் சொல்ஹெய்மின் சோசலிச இடதுசாரி கட்சியும் இடம்பெற்றுள்ளமை குறிபபிடத்தக்கது.

கட்சியின் தலைவராகவும் சிறப்பு ஆலோசகராகவும் சொல்ஹெய்ம் பணியாற்றியுள்ளார். நோர்வே அரசாங்கம் மாறுவதால் இலங்கை அமைதிப் பிரச்சினைகளில் எவ்வித பாதிப்பும் இருக்காது என்று நோர்வே தெரிவித்துள்ளது. தற்போதைய பிரதமர் கஜெல் மக்னே போண்டெவிக் தனது தோல்வியை ஒப்புக் கொண்டுளளார். தொழிலாளர் கட்சியின் தலைவரான ஜென்ஸ் ஸ்டோல் டென்பொக் (வயது 46)அந்நாட்டின் புதிய பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார்.

169 ஆசனங்களுக்கான தேர்தலில் தொழிலாளர்கட்சி 61,சோசலிச கட்சி 15, சூழலியல் கட்சி 11 என மொத்தம் இடதுசாரிச் கூட்டணியினர் 87 ஆசனங்களை கைபபற்றியுள்ளனர். புதிய அரசு அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது (ந-04)

## கலைநிகழ்வும் கண்காட்சியும்

(காரைநகர்)

வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விக் மேம்பாட்டு நிலைய காரைநகர் பிரதேச முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வும் கண்காட்சியும் இன்று முற்பகல் 10.00 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி மண்டபத்தில் காரைநகர் முன்பள்ளி இணைப்பாளர் ச.சுமதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலாநிதி ஆ தியாகராஜா ம.ம.வி. அதிபர் கா. குமாரவேலுவும் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய அதிகாரி எஸ். நடராசாவும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் தீவக முறைசாரா கல்விப் பணிப்பாளர் கே. கணபதி மற்றும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி ச.பாஸ்கரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-2)



## சாயி அருளமுதம்

**எனது உண்மையைப்பற்றி நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியேற்பட்ட காரணம் யாதெனில் நீங்கள் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அந்தச் சீர்திருத்தத்தின் மூலம் ஆனந்தம்பெற்று, அதன் பயனாக என்னாலிடப் படடுள்ள கட்டுப்பாடுகளை அனுசரிப் பதற்கு உந்தப்பட்டு 'தன்னையறிதல்' என்னும் குறிக் கோளை நோக்கி முன்னேறிச் சென்று உங்கள் இதயத்தில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் சாயியை உணரவேண்டும் என்னும் விருப்பமேயாகும்.**

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை**




முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற எழுச்சிப் பிரகடனத்தில் நடைபெற்ற அரங்க நிகழ்வையும், கலந்துகொண்ட மக்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

## மயிலிட்டிக்கடலில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம் மயிலிட்டி கடலில் இளைஞர் ஒருவரை ஆயுதங்களுடன் கைதுசெய்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வேலாயுதம் இராமச்சந்திரன் (வயது19) என்ற இளைஞர் மல்லாகம் நீதிமன்ற உத்தரவின்பேரில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வேலாயுதம் இராமச்சந்திரன் கைதுசெய்யப்பட்டபோது அவரிடமிருந்து ரி -56 ரகத் துப்பாக்கி - 01 அதற்கான ரவைகளுடன் மைக்ரோ ரக பிஸ்டல் - 01 அதற்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (சு)

## அரசசார்பற்ற பிரதிநிதிகளுடன் திருமலையில் புலிகள் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூர் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

சேனையூர் மத்திய கல்லூரியில் முற்பகல்10 மணிக்கு ஆரம்பமாகிய இச்சந்திப்பு பிற்பகல் 1 மணி வரை நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணனும் இச்சந்திப்பில் பங்கேற்றார்.

மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து உள்ளூர் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். (ச-4)

## தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸாருடன் கண்காணிப்புக்குழுவினர் நேற்றுச் சந்திப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விளக்கமறியலில் உள்ள மூன்று பொலிஸாரை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழீழ மன்னார் நிர்வாகப் பிரதேசத்தில் அனுமதியின்றி நுழைந்த மூன்று பொலிஸாரும் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் மூவரும் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மூவரையும் விடுதலைசெய்ய கோரிக்கை விடுத்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், பொலிஸாரை சந்திக்க விடுதலைப் புலிகளிடம் அனுமதிகோரியிருந்தனர்.

இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதையடுத்து நேற்று கிளிநொச்சியில் மூன்று பொலிஸாரையும் கண்காணிப்புக் குழுவினர் சந்தித்து உரையாடினர். (ச-4)

(மற்றொரு செய்தி உள்ளே)

## தேர்தல் அறிக்கைகள் வெளியான....

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சியில் மக்களை இணைத்து முன்னெடுத்தல், தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்லுதல், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பன குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். நேற்றுக் காலை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எஸ்.கஜேந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இருதரப்பும் விரிவாக கருத்துக்கள் பரிமாறிக் கொண்டபோதும் முடிவேதும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி தேர்தல் அறிக்கைகள் வெளியான பின்பே கூட்டமைப்பு தனது முடிபை வெளியிடும் என ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஆழிப்பேரலை பொதுக் கூட்டமைப்பு ஆகியவை முடங்கியிருப்பது குறித்து ஏற்கனவே கொழும்பில் உள்ள சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறிவருகிறோம். வெளிநாடுகளிலும் அந்நாட்டுத் தலைவர்களிடமும் இதை விளக்கி வருகிறோம்.

விரைவில் பிரான்ஸ் செல்லும் நான் அந் நாட்டின் தலைவர்களிடத்தில் வவுனியா பிரகடனம் குறித்தும் தற்போதைய அரசியல் சூழல் குறித்தும் எடுத்துவிளக்கவுள்ளேன் என ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். (ச-4)

## கொழும்பு...

இதனையடுத்து பாதுகாப்புப் பிரிவிற்கும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவிற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

விசேட அதிரப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் நீதிமன்றத்திற்கு வந்து தேடுதல்களை நடத்தினர். எனினும் அங்கு குண்டு ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது தொ[illegible]பில் பொலிஸார் தற்போது வி[illegible]களை மேற்கொண்டு வ[illegible]னர். (ச-4)


DAY CLASS
(கலைப்பிரிவு)
ஆரம்பம்: சனி காலை 8 மணி

| | |
|---|---|
| தமிழ் - மீரா | ஆங்கிலம் - சுதர்சன் |
| இந்து நாகரிகம் - ஜோதீஸ்வரன் | கிறிஸ்தவம் - மல்லிகா |
| அளவையியல் - மோகன் | புவியியல் - இக்னேசியஸ் |
| நாடகம் - கணேஷ் | |

(C-1645)
DMI JAFFNA

வேலை ஆட்கள் தேவை
துணிகளில் பிறிண்டிங் செய்தல், றெஜிபோம் பிறிண்டிங், றெஜிபோம் வெட்டுதல், ஸ்கிறீன் பிறிண்டிங் செய்வதற்கு பயிலுநர்களும், வேலை தெரிந்தவர்களும் (பெண்பிள்ளைகள்) தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
வள்ளி ஸ்கிறீன் பிறிண்டிங்
யோ.அருட்செல்வன்
தொ.பே.இல: 021 4591158
கே.கே.எஸ் வீதி,
நந்தாவில், தாவடி.
(9795)

அதிரடி விலைக்கழிவில்*

10500/=
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M, மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
டயலொக் 500/=, மொபிரெல்300/= பக்கேஜ் இணைப்புக்களுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகட்கு:
பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி
OFFICE: 185 முதலாம்மாடி கஸ்தூரியார் வீதி
SHOP: 205/01 கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்)
T.P: 0712 - 399220, 0714 - 182500 யாழ்ப்பாணம்
(C-அ-1672)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி
ரேணுகா மேனன் நடித்த
தாஸ்
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

மனோகரா

புதிய வெளியீடு
சிம்பு, கோபிகா
மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
கா.நே: 10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
சத்தியராஜ், சிபி, சதா, வடிவேலு
மற்றும் பலர் நடித்த
மண்ணின் மைந்தன்
கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

இரத்ததானம் இலகுவானது. உன்னதமானது
இரத்ததானம்
இரத்தம் உடல் இழையங்களுக்கு உணவு, ஒக்சிசன் போன்றவற்றை வழங்குவதற்கும், நோய்க் கிருமிகளுக்கு எதிராகப் போராடி அவற்றை அழிப்பதற்கும் அத்தியாவசியமானது.
அதிகளவு இரத்தப் போக்கின்போதோ, இரத்தத்தின் வெவ்வேறு கூறுகள் குறைபாடாக உள்ள பொழுதோ இரத்தத்தை முழுமையாகவோ அல்லது கூறுகளாகப் பிரித்தோ அவ்வவ் நோயாளிகளுக்கு ஏற்றப்படும்.
மேற்கூறிய தேவைகளுக்கு மனித குருதியை மட்டுமே பயன்படுத்தமுடியும்.
இத் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக ஒருவர் குருதியை வழங்குவதே இரத்ததானம் எனப்படும்.
இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.